# தமிழனாக உன்னை அழைக்கின்றேன்

## வினாடிக் கதைகள்




தமிழ் ஈழமுருகதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANN (ERDE) MAGAZIN
V. Sivarajah
Am Windhövel 18a
47249 Duisburg
Germany

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனாக உன்னை அழைக்கின்றேன்

(வினாடிக் கதைகள்)

ஈழம் ஆசிரியர்
ஈழ முருகதாசன்
(பி.சி.சின்னத்துரை இராசகருணா)

**P.S.RAJA KARUNA**
EELAAM,
Richard str - 70,
58507 Ludenscheid
Germany.
Tel & Fax : 00 49. 2351 - 860156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விவரம்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | * தமிழனாக உன்னை அழைக்கின்றேன் |
| ஆசிரியர் | * ஈழ முருகதாசன் |
| மொழி | * தமிழ் |
| பதிப்பு ஆண்டு | * 2000 |
| பதிப்பு விவரம் | * முதல் பதிப்பு |
| உரிமை | * ஆசிரியருக்கு |
| தாளின் தன்மை | * 11.6 |
| நூலின் அளவு | * கிரௌன் சைஸ் (12 1/2x18 1/2 செ.மீ) |
| அச்சு எழுத்து அளவு | * 10 புள்ளி |
| மொத்த பக்கங்கள் | * 96 பக்கங்கள் |
| நூலின் விலை | * ரூ.20.00 |
| அட்டைப்பட ஓவியம் | * திரு. மோகன் |
| லேசர் வடிவமைப்பு | * ஜெய் விக்னேஷ் எண்டர்பிரைசஸ் வடபழனி, சென்னை - 26. |
| அச்சிட்டோர் | * எம்.கே.எண்டர் பிரைசஸ் |
| நூல் கட்டுமானம் | * தையல் |
| வெளியிட்டோர் | * மணிமேலைப் பிரசுரம், சென்னை-17. |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 1 | அடிமைப் பெண் | 25 |
| 2 | யார்...... அவன்? | 28 |
| 3 | விளாம்பழம் | 30 |
| 4 | மனித நேயம் | 32 |
| 5 | புரியாத இராகங்கள் | 34 |
| 6 | வாழ்வும் வளமும் | 36 |
| 7 | தரிசனம் | 38 |
| 8 | மீண்டும் ஒரு பிறப்பு | 40 |
| 9 | கொலை | 42 |
| 10 | விடுதலை | 44 |
| 11 | தவிப்பு | 46 |
| 12 | மின்னொளி | 48 |
| 13 | பொறுப்பு | 51 |
| 14 | எனக்கு பிடித்தவள் | 53 |
| 15 | உயிர்த்துடிப்பு | 55 |
| 16 | தேய்பிறை | 57 |
| 17 | ஊர் உலா | 59 |
| 18 | அளவுக்கு மீறினால் | 61 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வ. எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 19 | சமுதாய நோய்கள் | 63 |
| 20 | வேகம் | 65 |
| 21 | இயற்கை வளம் | 67 |
| 22 | துடிப்பு | 69 |
| 23 | அன்பு | 71 |
| 24 | தணியாத தாகம் | 73 |
| 25 | உரிமைக்குரல் | 76 |
| 26 | சுதந்திரப்போர் | 79 |
| 27 | தேவதை | 82 |
| 28 | தாயகம் | 84 |
| 29 | உருமாறும் உருவம் | 87 |
| 30 | கருணை | 89 |
| 31 | கொள்ளி | 91 |
| 32 | முடிவு | 94 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் தாய் மண்ணுக்கு!

"தாய் மண்ணை நேசித்த
காவல் தெய்வங்களான
மாவீரர்களுக்கு "

*சமர்ப்பணம்*

தமிழன்புடன்

**ஈழமுருகதாசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதய அஞ்சலி

## 'அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்'

மாதா, பிதா, குரு, தெய்வம் என்பது முதியோர் வாக்கு. என் தந்தையின் கண்டிப்பும், ஊக்கமும் இல்லையேல், இன்று நான் ஒரு படிப்பறிவே இல்லாத ஒரு மனிதனாக இருந்திருப்பேன்.

என் தந்தை மறைந்து எட்டு ஆண்டுகள் ஆனாலும் என் தந்தையின் நினைவுகள் என் உள்ளத்தில் ஒளியாகவும், நினைவாகவும் இன்றும் இருக்கின்றன.

கல்வியறிவு ஊட்டிய என் தந்தைக்கு நன்றிக்கடனாக இந் நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

என்றும் உங்கள் நினைவுடன் மகன்
**பி.சி. சின்னத்துரை இராசகருணா**
**2.11.1999**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் முன்னுரை

தமிழ்க்கடவுள் முருகன் மேல் கொண்ட அன்பும் தாய் மண்ணில் ஏற்பட்ட தொப்புள் கொடி உறவின் காரணமாகவே சின்னத்துரை இராசகருணா ஆகிய நான் ஈழ. முருகதாசனாக பெயர் மாற்றம் அடைந்தேன்.

இன்று தமிழ் இனம் உலகெங்கிலும் பரந்து வாழுகின்றனர். "திரை கடல் ஓடியும் திரவியங்கள் தேடு" என முதுமொழி இருக்கின்றது. அந்த முதுமொழி பொய்த்து விடாது இன்று மேலைத்தேய மக்கள் எங்கள் கலாச்சாரங்களைப் பின்பற்றி நடக்கும்பொழுதும் - திரவியங்கள் தேடவந்த தமிழன் உலகெங்கிலும் பரந்து வாழும்பொழுதும் தமிழன் என்ற அடையாளத்தை மறந்து விடுவானோ என்ற ஐயம் என்னுள் எழுந்தது. சில அற்ப சுகங்களுக்காக தமிழன் என்ற அடையாளம் அழிந்து விடாது அதனைத் தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு பத்திரிகையாளன் என்ற முறையில் எனக்கு உண்டு. தமிழ்ச்சமூகம் விழிப்படைய வேண்டும் அது தான் என் அவா. எமது இனம் விடுதலை அடைந்து - அதாவது சுய உரிமை அடைந்து தமிழினம் வெற்றி நடைபோட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் இனத்தின் மதிப்பு உலக அளவில் உயர்ந்து நின்ற பொழுதும் என்ன பயன்? எமது மக்கள் தாயகமாம் தமிழீழத்தில் போருக்குள் அன்னிய அடக்கு முறைக்கும் மறைமுகமான திட்டமிட்ட இன அழிப்பாலும், மருந்துத் தடையால் - உணவுத் தடையால்- எம்மக்கள் பட்ட துயரங்களும், நான் தமிழகம் சென்ற பொழுது தமிழ்மக்கள் விழிப்படையாத சமூகமாக தமிழ் மக்கள் கைவிடப்பட்ட நிலை; பொன்விளையும் பூமி எல்லாம் கைவிடப்பட்ட நிலை; இந்நிலை மாறி தமிழன் என்ற உணர்வில் நடந்தால் தமிழ் மக்கள் நலமாக வாழ்வார்கள் என்ற உண்மையை நாளைய சந்ததிக்கு நாம் சொல்லி எமது முன்னோர் பட்ட தியாகங்களை அவர்கள் உணரவேண்டும் என எண்ணினேன். அந்த உணர்வில் ஏற்பட்ட நூல்தான் தமிழனாக உன்னை அழைக்கின்றேன்.

தமிழுக்குள் தமிழ் என்ற எழுத்தில் குற்று வட்ட வடிவத்திற்குள் உலகம் அடங்கி இருக்கின்றது. தமிழ் மக்கள் எமது தமிழ்மொழி கலை, கலாச்சாரங்களைப் பாதுகாத்து, வருங்கால சந்ததிக்கு நல்ல பயன் உள்ள விடயங்களை அவர்களுக்கு விட்டுச் செல்ல வேண்டும்.

"தமிழெனும் உறவுக்குள் தமிழன்புடன்

தமிழ் உறவுகளை உயிராக மதிப்போம்"

தமிழன்புடன்

***பி.சி. இராசகருணா***

ஈழ.முருகதாசன்

(சின்னத்துரை இராசகருணா)

# அணிந்துரை

நண்பர், எழுத்தாளர், பத்திரிக்கையாளர், பி.எஸ். இராசகருணாவின் ஓரிரு பக்க மணிக்கதைகளைப் படித்தேன், சுவைத்தேன்.

மணிக்கதைகளுக்கு ஏற்ற மணியான அணிந்துரையை எழுதுவது தானே நியாயம் ?

**கருணை** : குடும்பத்தலைவனை இழந்த வீட்டின் வறுமையைப் பயன்படுத்தி, அந்தக் குடும்பத்தை உற்றார் – உறவினர் 'நமக்கேன் இந்தக் தலைவலி' என்ற 'ஜீவகாருண்ய' அடிப்படையில் கைவிட்ட நிலையில் தன்னை அந்தக் குடும்பத்தின் அனுதாபக்காரராகக் காட்டிக்கொண்டு அந்த வீட்டினுள் புகும் ஒரு அயோக்கியன் தன்னை விடப் பதினைந்து வயது குறைந்த பெண்ணைக் கன்னிகா தானமாக அடையும் கொடுமையை வர்ணிக்கிறது.

**உருமாறும் உருவம்** : தனது தாயகத்திலிருந்து மேற்குலகிற்கு அகதியாக வந்து, தனக்கு வசதியான வாழ்க்கை அமைய ஏணியாக அமைந்தவனை எட்டி உதைக்கும் ஒரு தமிழ் இளைஞனின் கதை.

**மனிதநேயம்** : பணக்காரியை விட, ஏழைக்குத்தான் தான தர்மம் செய்ய மனம் வரும் என்று நிலை நாட்டும் கதை.

**பொறுப்பு** : 'உத்தியோகம் புருஷ லட்சணம்' என்பதை மறந்து மனைவிமாரை வேலைக்கனுப்பி விட்டு, சோம்பேறி வாழ்க்கை நடாத்தும் கணவர்களுக்கு ஒரு சாட்டை அடி.

**சுதந்திரப் போர்** : புலம்பெயர்ந்த மண்ணிலிருந்து கொண்டு தனது தாயகத்தில் உயிர்த் தியாகம் செய்பவர்களை நினைத்து தினம் தினம் இலட்சியச் சொற்பொழிவு ஆற்றும் கணவனுக்கும், புலம் பெயர்ந்த நாட்டில் 'தாம் தாம்' என்று வாழ நினைக்கும் மனைவிக்கும் இடையே ஏற்படும் கருத்து முரண்பாடுகளை வெளிப்படுத்தும் கதை.

**உரிமைக்குரல்** : புலம் பெயர்ந்த நாட்டில், புலம் பெயர்ந்தவர்கள் நடத்தும் சிகையலங்காரக் கூடத்தில் தமிழ் சினிமாப் பாட்டைக் கேட்பதா, அல்லது 'இந்தி' சினிமாப் பாட்டைக் கேட்பதா, என்ற மிக முக்கிய பிரச்சினைக்குத் தீர்வு காணும் விவாதம்.

**எனக்குப் பிடித்தவள்** : முகவர்களுக்கு பெரும் பணம் கட்டி மகனை ஐரோப்பாவிற்கு அனுப்பிய பெற்றோர் தாயகத்தில் கஞ்சிக்கு வழியில்லாமல் தவிக்கிறார்கள். புலம் பெயர்ந்த மகனோ, சினிமாக்காரியின் தரிசனம் பெறவும் அவளுக்குத் தங்கச்சங்கிலி ஒன்றைத் தாரை வார்ப்பதற்கு என்று டிக்கட் வாங்குவதற்குக் 'கியூ' வரிசையில் முட்டி மோதி நிற்கும் காட்சி.

**விளாம்பழம்** : தாயகத்தில் விளாம்பழம் சாப்பிட ஆசைப்பட்டு பழத்தோட்டத்திற்குச் சென்ற இரு சிறுவர்கள், வெடிகுண்டை விளாம்பழம் என்று நினைத்து அதன் நூலை இழுத்தபோது அதற்குப் பலியாகும் அவலம்.

**வேகம்** : புலம்பெயர்ந்த நாட்டின் மாச்சோ (MACHO) கலாசாரத்திற்கமைய கடுகதி நெடுஞ்சாலைகளில் கண்மண் தெரியாத கன வேகத்தில் காரோட்டி கை காலிழந்த தமிழ் இளைஞனின் அவலம்

**சமுதாய நோய்கள்** : புலம்பெயர்ந்த நாட்டிலும் சீதனப்பிசாசாக இருந்த தந்தையைத் திருமண மண்டபத்தில் உள்ள ஓர் அறையில் பூட்டி வைத்துவிட்டு தாலிகட்டிய ஒரு தமிழ் இளைஞனின் வீரமும் விவேகமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மின்னொளி :** தன்னைப் பெரும் கடனில் மூழ்கி, மேற்கு நாடொன்றிற்கு அனுப்பி வைத்த பெற்றோர் வறுமையில் வாடுவதையும் மறந்து, மதுக் கலாசாரத்துக்கு அடிமையாகி புலம் பெயர்ந்த மண்ணில் இறந்த ஒரு தமிழ் இளைஞனின் அவலக் கதை.

**தவிப்பு :** தாயகத்தில் வறுமை நிலவும் ஒரு விவசாயக் குடும்பத்தில் பிறந்த ஒரு பெண்ணிற்கு அதிர்ஷ்டவசமாக ஒரு திருமணம் நிச்சயமாகிறது. ஆனால் ஸ்ரீ லங்கா அரசின் குண்டு வீச்சு விமானங்களுக்கு அவள் பலியாகி விடுகின்றாள். கைக்கெட்டியது வாய்க்கு எட்டவில்லை.

**புரியாத ராகங்கள் :** அரச மர நிழலில் வாழ்ந்து வந்த அந்தக் கிழவனை ஆண்டிப் பரதேசி என்கிறார்கள் ; தாடித் தாத்தா என்கிறார்கள் ; பெண்பொறுக்கி என்றும் சொல்லி அடித்து, உதைத்து இம்சித்தார்கள் சிலர். அவன் தாயகத்திற்காக தனது குடும்பத்தையும் வாழ்வையும் அர்ப்பணித்த உத்தமன் என்பது இறுதியில்தான் தெரிய வந்தது.

முப்பத்திரண்டு வினாடிக் கதைகளை இராசகருணா நூலாக வெளியிடுகிறார். தாயகத்திலும் புலம் பெயர்ந்த நாடுகளிலுமுள்ள சமகாலப் பிரச்சினைகளை இனம் கண்டு அவற்றை சமூகப் பார்வையுடன் அணுகியுள்ளார்.

சமுதாயத்தில் புரையோடியிருக்கும் ஒரு பிரச்சனைகளை விளக்கி, அந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட கதாபாத்திரங்களின் தன்மையை நிலை நாட்டி, அந்தப் பிரச்சினையை சமூகப் பிரதிக்ஞையுடன் வாசகர் மனதைத் தொடும் வகையில் ஓரிரு பக்கத்தில் கதை புனைவது என்பது மிகச் சிரமமான ஒரு காரியம்.

வள்ளுவரின் ஈரடிக் குறளைப்போல இராசகருணாவின் ஓரிரு பக்கக் கதைக் கருவூலங்கள் எனது மனதைத் தொடுகின்றன. அவரது முயற்சி வெற்றி பெற்றுள்ளது என்பது எனது நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி என்பது ஓர் ஓட்டப்பந்தயத்தின் இறுதியான முடிவுக் கோடு அல்ல. அந்த முடிவுக்கோடு நீண்டு கொண்டே செல்லும். நண்பர் இராசகருணா நீண்டு கொண்டே செல்லும் அந்த முடிவுக் கோட்டை எப்போதும் தாண்டும் வலுவுடன் எழுத வேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

இராசகருணா போன்ற தமிழ் எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுக்க - அவர்களை வளர்த்து விட - அவர்களை ஊக்குவிக்க 'வேகம்' சஞ்சிகை உறுதி பூண்டுள்ளது என்று சொல்லி விடைபெறுகிறேன்.

**டாக்டர் சு. இந்திரகுமார்**
மனநோய் மருத்துவர், பிரித்தானியா
தமிழக அரசு, ஸ்ரீலங்கா அரசின்
விருது பெற்ற எழுத்தாளர்
பிரதம ஆசிரியர் "மேகம்" சஞ்சிகை

02-11-1999.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

துளிக்கதைகள் கொண்ட துளி நூலைக் கண்டேன்.

துளித்துளியாய்த் துளிர்க்கின்ற மனித மனங்களின்

துடிப்பினைத் துல்லியமாய்த் தேர்ந்தெடுத்து எம்

மனத்தைத் துளைத்து எம்மையெல்லாம்

தமிழர்களாய் வாழ்ந்திடவும்

தமிழுணர்வுடன் வாழ்ந்திடவும்

தமிழினத்தின் இன்றைய

வீறுகொண்ட நிலையினையும்- அல்லலுறும் அமுந்திக்

கிடக்கும் நிலையினையும் அழகுடன் எடுத்து

அழகு தமிழில்

தந்துள்ளார், தம்பி இராசகருணா அவர்கள்.

இத்தகைய உணர்வூட்டமுள்ள

இளம் எழுத்தாளர்களை ஊக்குவிப்பது - வளர்ப்பது

எமது கடமை. அவரின் எண்ணங்கள் ஏற்றம் பெற்று

எழுத்தாக எம்மிடம் தொடர்ந்து வரவேண்டும்

என வாழ்த்துகின்றேன்.

தமிழன்புடன்.
**நா.சி.கமலநாதன்**
அழலாடி
கமலம் இதழ் ஆசிரியர்.
02.11.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

வினாடிக்கதைகள் என்னும் நூலை உ.த.ப. இயக்கத்தின் யேர்மன் கிளை வெளியீடு செய்து வைப்பது மிக மகிழ்ச்சிக்குரிய விடயம். நாம் புலம் பெயர்ந்தாலும் தமிழர் என்ற உணர்வு ஒவ்வொரு தமிழ் மக்களின் உள்ளத்திலும் வரவேண்டும் என்ற நோக்கில் ஈழ முருகதாஸ் எழுதிய வினாடிக் கதைகளில் எனக்குப் பிடித்த கருத்து என்ன வென்றால் தமிழர்கள் புனிதமாக மதிக்கப்படும் தாலியிலும் அடிமைத் தனத்தை புகுத்தியதுதான் மிக வேதனைக்குரிய விடயம். வெறும் கதையாக மட்டும் அல்லாது, தமிழினம் விழிப்புணர்வு அடையவேண்டும் என்ற நோக்கில் எழுதப்பட்ட கதையாக இருக்கின்றது.

இன்றும் உலகெங்கிலும் அல்லல்பட்டுக்கொண்டு இருக்கின்ற தமிழ் மக்களுக்கு மிக விரைவில் நாடு கிடைத்தால்தான் எம் தமிழினம் நிம்மதியுடன் வாழும்.

அதற்கு இம்முயற்சி போன்ற விழிப்புணர்வூட்டும் கதைகள் இன்னும் பல வரவேண்டும் என ஈழ. முருகதாசனை வாழ்த்துகின்றேன்.

நன்றி

**தமிழின்பன்**

**கே.ரீ. கணேசலிங்கம்**

உலகத் தமிழ்பண்பாட்டியக்க பொதுச் செயலாளர்

உ.த.ப.இ. ஐரோப்பிய ஒன்றிய அமைப்பாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

## உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இஸ்கன்டிநேவியா

## Internationale Tamil Kulturel Bevaegelse

## International Movement For Tamil Culture (Scandinavia)

International President
Prof. Dr.R.N. Veerappan
110, Jawin Bangan
Berkaley Garden
41150 Klang
Malaysia
Tel.03417905.

Eura Federention
Tamilmany Chemmal
K.T.Ganeshalingam
Saixbegeherir . 83
48431 Rbeine
Germany
Tel. 597114256

InternationalVice President
President Scandinavia
Pandit. K. Jeyakumar
(Poet. Bharathibalan)
Vallekde Vej. 12,
Barve Denmark
Telefax. 0045.59668047

SJ4 4534

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

கவிஞர். இராசகருணா (ஈழமுருகதாசன்) அவர்கள் எனது அருமை நண்பர். புலம் பெயர் உலகிற்குள் இருந்து பல சிரமங்களுக்கு மத்தியில் எழுத்துப்பணி புரிந்து வருகிறார்.

தமிழரிடம் தாய்த் தமிழீழப்பற்று மேலோங்க வேண்டும் என்ற ஆதங்கம் அவரிடம்.

அதற்காக யேர்மனியில் இருந்து "ஈழம்" என்னும் பத்திரிகையை இலவசமாக நடத்தி வருகிறார்.

எமது தமிழர்தம் சமுதாயச் சிறுமைகளைச் சாடுவதில் அசகாயசூரர்.

நண்பரால் வெளியிடப்பெறும் இந்தச் சிறுகதைத்தொகுதி அவரது உள்ளத்தில் கொழுந்து விட்டு எரியும் தாயக விடியலுக்கான ஒரு குறியீடு என என்னால் சீரணிக்க முடிகிறது.

அவர்தம் எழுத்துப்பணி மேலும் தொடர எனது வாழ்த்துக்கள்

இவண்

**கவிஞர். பாரதிபாலன்**

டென்மார்க்

03.11.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**தமிழ்அருவி**

(யேர்மனி) (பதிவு செய்யப்பட்டது)

Rgd. as a news paper in Germany.

திருமிகு. இராசகருணா
ஆசிரியர் ஈழம்
லூடன்சைட் யேர்மனி
2.11.1999.

அன்புடையீர்,

தாங்கள்... எழுதிய சிறுகதைத் தொகுப்பு ஒன்று வெளியிடப்பட இருப்பதறிந்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

தாயகத்தை விட்டு அன்னிய நாடுகளில் வாழ்கின்ற நாங்கள் ஒவ்வொருவரும் பல பல சிறுகதைகளின் கருவூலங்களாகவே வாழ்கின்றோம் என்பதை அவரவர் நெஞ்சங்களே அறியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொந்தக் கதைகளே சோகங்களாக நம்மில் பலர். தாயகத்தில் சொல்ல முடியாத அளவிற்கு நம்மினம் வேதனையில் இருக்கின்றது.

யாவும் கற்பனையே என வெளிவந்த முன்னைய சிறு கதைகளெல்லாம் இன்றைய கால கட்டத்தில் அத்தனையும் நனவுகளாகவே காண்கின்றோம். யதார்த்த வாழ்வின் நிகழ்வுகளைச் சிறுகதைகளில் பதிவு செய்து நமது எதிர்காலச் சந்ததி அறிந்து கொள்ளச் செய்வது நம் வரலாற்றுக் கடமை.

அந்த வகையில் உங்கள் முயற்சியை மனதாரப் பாராட்டுவதோடு உலகெங்கும் பரந்து வாழும் நம் உறவுகளின் கரங்களில் அவை கிடைக்கப்பெற்று தமிழ் இலக்கிய உலகில் பதிவுற மனதார வாழ்த்துகிறேன்.

தமிழால் ஒன்றிணைவோம்

அன்புடன்,

தமிழருவி ஆசிரியர்,

தலைவர்,

தமிழர் கலாச்சார

நற்பணிமன்றம் எசன். e.V.

30.10.99

Kappenberg Str.4.45355 Essen. Germany. Tel & Fax. 0261/668809.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிய யாத்திரிகர்களின் ஒன்றியம்
## நெதர்லாந்து

Banneux ND
Coordinate - comite voor
Aziatische Pelgrims
Nederland

# வாழ்த்துரை

திரு. இராசகருணா அவர்களின் விடைத்தொகுதி பல சுவை நிறைந்த "தமிழனாக உன்னை அழைக்கின்றேன்" என்ற பொட்டகத்திற்கு எனது வாழ்த்தை தெரியப்படுத்துவதில் மிகவும் களிப்படைகின்றேன். "எழுத்தாளன் ஒரு நாட்டின் முதுகெலும்பு" என்று நகைச்சுவையாக நடிகர் கே.ஏ. தங்கவேலு திரைப்படத்தில் கூறியிருந்த வசனம் எவராலும் மறுக்க முடியாததும் மறக்க முடியாததும் ஆகும். எழுத்தாளனுக்கு எழுத்து வன்மை இருந்தால் மட்டும் போதாது; கற்பனையும் வேண்டும். கற்பனை எழுத்தாளனின் அத்திவாரம்.

இந்த இரண்டும் ஒருவர் இடத்தில் அமைவது அதிசயம். அந்த வகையில் இவ்விரு திறமைகளும் ஆசிரியர் இராசகருணாவிடம் இருப்பதை நான் நன்கு அறிவேன். அவரின் எழுத்துப் பணியும் தமிழ் வளர்ச்சிக்காக வெளியிடும் "ஈழம்" பத்திரிக்கையும் மேலும் வளர வேண்டும் என்று வாழ்த்துவதில் மிகவும் பெருமைப்படுகின்றேன்.

இப்படிக்கு
**எஸ்.ஜீ.எம்.**
2.11.1999

Çoordinator voor Srilanka, India en Suriname :
Francis A.X. Pathmarajah Gerrit Witsehof 6
3813 MP AMERSFOORT Nederland
Telefoon : 033-4806902

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்

கலை இலக்கிய சமூக இருமாத இதழ்
'MANN' (ERDE) Tamilisches magazin fuir
Kultur, Literatur und Soziales

தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அநேகமானவர்களின் மனப்போக்கு சுயநலம், பணம் சம்பாதித்தல், நாட்டுப் பற்றின்மை, தாய்மொழியை தாய்நாட்டைப் பற்றிச் சிந்திக்காமல் குறுகிய வட்டத்தைப் போட்டுக்கொண்டு, மேல் நாட்டு வாழ்க்கையை வாழ்ந்து விட்டால் போதும் என்னும் அற்ப சிந்தனையேயாகும்.

எல்லோரும் சொல்கிறார்கள் ஓர் எழுத்தாளன் பிறக்கிறான் என்று- எழுத்தாளன் பிறப்பதே இல்லை. அவன் எழுத்துக்கள்தான் பிறக்கின்றன. அவன் படைக்கின்றான். ஒருவன் படைத்த மேலான படைப்புகள்தான், அவன் இருக்கிறான் என்பதை வலியுறுத்துகின்றன.

அந்த வகையில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பல கவிதைகள், பல சிறுகதைகள், பல கட்டுரைகள், பல சிறுவர் ஆக்கங்கள், பல பயனுள்ள விடயங்களை எழுதிவரும் தமிழ்மணி. திரு.ப.சி.இராசகருணா (ஈழமுருகதாசன்) அவர்களின் இந்த வினாடிக்கதைத் தொகுதிக்கு வாழ்த்துரை வழங்குவதில் பெருமைப்படுகின்றோம். 32 வினாடிக்கதைகள் அடங்கிய இந்நூல் வெளியீட்டில் தாயக நினைவுகள், புலம் பெயர் நாடுகளில் தமிழர் வாழ் அவலங்கள், பெண்ணடிமை, சாதியம், விடுதலை உணர்வுகள், மூடநம்பிக்கை, இன, மத, மொழிப்பற்று, அடிமை வாழ்வு, ஆடம்பர வாழ்வு போன்ற யதார்த்த நிகழ்வுகளை கோடிட்டுக் காட்டியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமுதாயச் சீரிழிவுகளையும், நல்வாழ்வையும் எடுத்துக்காட்டி சமூக மாற்றத்திற்கான சிந்தனைக் கருத்துக்கள் இழையோடி இருக்கின்றன.

இயற்கை என்பது உண்மை ; வாழ்க்கை என்பது சரிதை. இந்த உண்மையான சரிதையைச் சிந்தித்து தியானிப்பவன்தான் படைப்பாளி. தனது சமகால உண்மைகளை இனம், மொழி, நாடு கடந்து எல்லோருக்கும் எல்லாமாக நடுநின்று சொல்கின்ற எழுத்தாளன், காலத்தை வென்றவன், மரணத்தைக் கடந்து வாழ்கின்றான்.

நீதியும் நியாயமும் நிர்மூலமாக்கப்பட்ட நம் சொந்த மண்ணில் நிலைத்து நின்று எழுத முடியாமல் புலம் பெயர்ந்து இன்று யேர்மனியில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தன்னுடைய இயல்பு நிலையை மாற்ற முடியாமல் கடந்த ஐந்து ஆண்டுகளுக்கு மேலாக "ஈழம்" பத்திரிக்கையை வெளியீடு செய்து கொண்டு இவ்வினாடிக்கதைத் தொகுதியையும் வெளியிட்டுள்ளார். தமிழ் மீது, இனம் மீது, மண் மீது இவர் கொண்டுள்ள பற்று இந்நூலைப் படிக்கும்போது உணர்வோம். யாவரும் படித்துப் பயன்பெற இது ஒரு நல்ல வினாடிக்கதைத் தொகுதியாகும் என்பதே எனது கருத்து.

"நல்ல ஒரு எழுத்தாளனும்

ஒரு நாட்டின் பேரொளியே ! "

வணக்கம்

**வ. சிவராசா**

மண் கலை இலக்கிய இதழ்

Duisburg Germany
2.11.199

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

“பேனா தலைகுனியும் போது மனித குலம் தலை நிமிர வேண்டும்” என்றார், ஓர் அறிஞர். சகல எழுத்தாளர்களும், இதழாளர்களும் மனித குலம் நிமிர வேண்டும் என்றே சிந்திக்கிறார்கள். ஆனால் காலப்போக்கில் இதழ் நிமிரவேண்டும், என்பதற்காகவே பேனாவின் தன்மையைக் குனிய வைக்கிறார்கள். மக்களின் தேவைகளை மறந்து அவர்களின் ரசனைக்களுக்கே தீனி போடுகிறார்கள். இப்படியான இதழ்கள் மலரவே வேண்டாம்.

நண்பன் “ஈழமுருகதாசன்” என்கின்ற சி. இராசகருணா அவர்களின், “வினாடிக்கதைகள்” என்னைச் சற்று சிந்திக்க வைத்தது. இது அவரை மிகைப்படுத்துவதற்காகக் கூறவில்லை. முப்பதுக்கும் மேற்பட்ட வினாடிக் கதைகளை முப்பது மணி நேரத்தில் எழுதி முடிப்பது என்பது போற்றுதற்குரியதே! என்னைப் பொருத்தவரையில் கிணறு வெட்டி அதை நீர்ப்பாசனத்திற்காக பயன்படச் செய்தார் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இதன் ஆழத்தை இறங்கிப் பார்க்கத் தேவையில்லை யென்று எட்டிப்பார்த்தே தெரிந்து கொண்டேன். இக்கதைகளின் ஆழத்தைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கிடும் பணியை மக்களிடம் விட்டு அதன் அகலத்தை மட்டும் கணக்கிட்டாரே அதற்காக அவரை முதலில் வாழ்த்துகிறேன்.

இக்கதைகளில் கற்பனைகளை விலக்கி கருத்துக்களை மட்டும் முன் வைத்திருப்பதும் பாராட்டப்பட வேண்டிய ஒன்றாகும். இவைகளில் என்னை ஈர்த்தவை "தரிசனம்" ஏன்? என்ற கேள்வி மட்டும் இன்னும் தமிழன் கேட்காமல் இருக்கின்றானே! என்பதைச் சொல்லாமல் சொல்லியிருக்கிறார். "விடுதலை" நண்பர் ஒருவர் கூறினார். "சாதி உண்டு என்பவன் கீழ்சாதி இல்லை என்பவன் மேல் சாதி" என்று. அதை நண்பர் ஞாபகப்படுத்தினாரே அதற்காக அவரை மீண்டும் வாழ்த்துகிறேன். அடுத்தது "புரியாத இராகங்கள்" இதில் அன்னியருக்கு அன்னியோன்னியமாக இருப்பவர்கள், சொந்த மண்ணில் அன்னியராக இருக்கிறார்கள் என்னும் நிசத்தைக் கொண்டு புரிய வைத்திருக்கிறார்.

அன்பு நண்பா! உனக்கோர் அறிவுரை! ஆனால்? எச்சரிக்கை !! வெறும் புகழ்ச்சியில் மட்டும் மயங்காதே! பேனா தலை குனியும் போது நீயும் சேர்ந்து குனியாதே! நிமிர்ந்து நில்! தொடர்ந்து செல்! வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு அழகு! உன் எழுத்துக்களினால் மக்கள் பண்பட வேண்டும் ! எனவே உன்னுடைய இம்முயற்சிக்கும் மென்மேலும் நீ எடுக்கும் நற்செயல்களுக்கும் எனது பூரண நல்லாசிகளும் வாழ்த்துரைகளும் உரித்தாகுக!

நன்றி ! வணக்கம் !

இங்ஙனம்
அன்புடன்

.....................விசு..................
ஆசிரியர்..... "சங்கமம்" (யேர்மனி)
அமைப்பாளர்...... "கவிக்குயில் இசைக்குழு"
29.10.99

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழனாக உன்னை அழைக்கின்றேன்

## அடிமைப் பெண்

காலை எட்டு மணிக்கு சுப முகூர்த்தம்— "வீடியோகாரர்களை இன்னும் காணவில்லை." என கண்ணப்பன்— குரல் கொடுத்தார்.

அப்பொழுதுதான் உறவினர்கள் வந்து காரில் இறங்கிக் கொண்டிருந்தனர்.

கவிதா தனக்கு- அருகில் இருந்த லதாவைத் தன்னுடைய கண் வார்த்தையால் திரும்பிப் பார்க்கும்படி கூறினாள். பாரிசுக்குப் புதிதாக இருந்ததால் லதாவுக்கு கவிதா சொன்ன கண்காட்டு விளங்காது, "என்னடி— கவிதா நீ— என்ன சொல்லுகிறாய்" என்றாள் அவள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அங்கே பார். லதா இந்த பெண்பிள்ளை எத்தனை பவுனில் தாலிக்கொடி போட்டிருக்கு தெரியுமே. எல்லோரும் பகிடி பண்ணகினம். பெற்ற தாய் தகப்பனைத் திரும்பிப்பார்ப்பது இல்லை. ஆனால் பிரான்சுக்கு வந்து கழுத்து நிறைய ஒரே பவுன் மயமாகத்தான் போட்டு இருக்கினம், யாராவது இந்தப்பெண்ணைக் கூட்டிக் கொண்டு போனால் குறைந்தது 300 பவுன் தேறும். எங்கள் நாட்டில் கஷ்டப்படுகின்ற மக்களுக்கு நிம்மதியாக ஒரு நேரச் சோறு கிடைக்கும். அத்தோடு பெரிய தொழிற்சாலை போட இந்த 300 பவுன் தொகையும் ஓரளவுக்கு போதும்." என்றாள் கவிதா.

"என்ன கவிதா. உனக்கு என்ன பொறாமையோ? உன்ரை புரிசனிட்டை சொல்லி நீயும் வாங்கிப் போட வேண்டியது தானே" என்றாள் லதா.

"நான் தாலியோ நகைக்கோ சொல்லவில்லை. எங்கடை ஆக்களைப் பார்த்துத்தானே அடுத்த நாட்டுக்காரன் திருடவாறான். இப்ப கலியாண வீடு என்றால் பின்னால் நான்கு ஆண்பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு போகவேண்டிக்கிடக்கு பாதுகாப்புக்கு என்று கதைக்கினம். அதோ தாலிக்கொடியைப் பார்த்தியே லதா! எத்தனை காசு போட்டு இருக்கினம் தமிழன் அடையாளச் சின்னத்திற்குக் கட்டவேண்டிய தாலிக்கொடி இப்ப காசு மாலையாக எல்லேபோச்சுது லதா. அங்கால பார். அந்தத் தாலிக் கொடியை என்ன புதிய வண்ணத்தில் செய்து இருக்கிறாள் என்று. இன்னும் தான் எங்கடை சனம் திருந்தவே இல்லை" என்றாள் கவிதா.

"கவிதா நீ பிரான்சுக்கு வந்ததிலிருந்து நல்லாத்தான் அடுத்த பெண் பிள்ளைகளைப் பார்த்து பொறாமைப்படுகிறாய் "என்றாள் லதா.

"லதா. நான் உனக்கு சொல்லுகிறது விளங்குதே. தாலியில் காசு போடவேண்டாம் என்று சொல்லவில்லை. வெள்ளைக்காரன் எங்கட நாட்டைவிட்டுப் போயும் அவர்கள் எங்கட பெம்பிள்ளையளின் கழுத்தில் தொங்கிக்கொண்டு தான் இருக்கினம் - இந்தியாவுக்கும் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைச்சுது 50 வருசமாகியும் அவர்கள் எங்களை அடிமைப்படுத்தித்தான் வைச்சிருக்கினம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி- சொல்லுறாய் கவிதா-"

"ஒருக்கா தாலியில் இருக்கும் காசைப்பார் அதில யார் இருக்கிறார்கள் என்று- அவர் அவன்ரை புரிசமார் அல்ல. லண்டன் ராசாவும் - ராணியும் தான் இருக்கினம்- உண்மையிலே தமிழப்பெண்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமே- காசில் தங்கள் படத்தையும். புரிசமாரின் படத்தையும் எல்லோ தூக்கவேண்டும். அதைவிட்டுவிட்டு லண்டன் ராசா ராணியின் காசில பதிச்ச உருவத்தை போட்டு இருக்கினம்? "

"கவிதா- என்னை மன்னிச்சுக்கொள். நான் உன்னைத் தப்பா நினைத்து விட்டேன். உன்னுடைய புரட்சி சிந்தனை தெரியாமல் உன்னைத் தப்பாக நினைத்ததுக்கு மன்னித்துக் கொள்" என்றாள் லதா-

திருமணம் இனிதாக நிறைவு பெற்றதும் கவிதாவின் வார்த்தைகள் லதாவிற்கு செருப்பால் அடித்தமாதிரி இருந்தது. இன்னும் தமிழ் மக்கள் அன்றிலிருந்து இன்றுவரை எல்லாப்பக்கத்திலும் அடிமைப்பட்டுக் கொண்டு தான் இருக்கின்றார்கள். முதல் புரட்சிப் பெண்ணாக தாலியிலிருந்து காசை எடுத்து என்ரை மனிசனின் படமும் என்னுடைய படமும் தான் போடவேண்டும். நான் என்றாலும் விடுதலை பெற்ற தமிழப்பெண்ணாக மாறுவம் என நினைத்தாள் லதா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார்..... அவன் ?

மாலைப்பொழுது காற்றின் வேகத்தில் மரக்கிளைகள் இசைபாடத் தொடங்கின. இன்னும் சில மரங்கள் அங்கும், இங்கும் தலையசைத்து துள்ளிசை நடனம் ஆடின.

தமிழ்ராசன்– பெரும் காற்றையும் பொருட்படுத்தாது முத்தமிழ் கலைமாலைக்குச் சென்றான். அப்பொழுதுதான், அறிஞர்களின் பேச்சு ஆயத்தமாகின. மேடையில் தோன்றிய அறிஞர், அறிவழகன் –

"இன்று தமிழ் இனம் உலகெங்கிலும் பரந்து வாழ்கின்றனர். நாம் எங்கள் முன்னோர் இயற்றி வைத்த தமிழ்க்கலைகளைப் பாதுகாக்க வேண்டியது எங்கள் கடமை," என மேடையிலே பேசும் பொழுது அங்குள்ள எல்லோரின் கை தட்டல் மண்டபத்தை உடைப்பது போல இருந்தது.

தமிழ்ராசனின் காதுகளில் யாரோ ஆங்கிலத்தில் அழகாக உரையாடுவது கேட்டது. அது மட்டும் அல்லாது, "தமிழைப்படித்து என்ன செய்வது. ஆங்கில. மொழிதான் சிறந்தது. என் பிள்ளைகள் கூட லண்டனில் தான் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்" என தற்பெருமையாக புகழ்ந்து கொண்டிருந்தார் அறிவழகன்.

தாய்மொழியாம் தமிழ்மொழியை வசைபாடும் அந்த எளிய தமிழ்மகன் யார்– என்று ஆவலுடன் குரல் வந்த திசையில் நடந்து போய் பார்த்தான், தமிழ்ராசன்

சில மணிகளுக்கு முன்பு மேடையில் தமிழ் மொழியின் பெருமையைப்பற்றிப் பேசிய அறிஞர் அறிவழகன்தான் என்றதும் ஒரு கணம்– மூச்சே நின்றுவிட்டது– போல் இருந்தது. மேடையில் மட்டும் வீர வசனம் பேசிய அதே அறிவழகன்தான்.

அப்பொழுதான் தமிழ்ராசனுக்கு பழைய முதுமொழி ஞாபகத்திற்கு வந்தது. 'ஊருக்கு உபதேசம் தனக்கு இல்லையடி மகளே' என்பது அதுமட்டும் அல்லாது, தமிழ்ராசன் நேரில் கண்ட சிறு சம்பவம் அவன். மனத்திரையில் ஓடின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யேர்மனியிலிருந்து பாரிஸ் நோக்கி பயணம் செய்யும் புகையிரத வண்டியில் பிரான்ஸ் எல்லை வந்ததும் ஒரு யேர்மன்காரரிடம் பிரான்ஸ் மொழியில் பயணச்சீட்டை காட்டுமாறு கேட்டார் அந்த அதிகாரி.

யேர்மன்காரரோ மௌனமாக இருந்தார். மீண்டும் கேட்டார் பிரெஞ்ச்சுக்கார அதிகாரி. யேர்மன் காரர் டொச்சில் கோபமாக பதில் - சொன்னார். ஆனால் -

பிரெஞ்சுக்காரரோ - தனது மொழியில் தான் அவருடன் பேசினார்.

இத்தனைக்கு மத்தியிலும் இருவரும் தங்கள் தாய்மொழியை ஒரு போதும் விட்டுக்கொடுக்கச் சம்மதிக்கவில்லை.

இருவரும் தங்கள்- தங்கள் மொழியில்தான் வாக்குவாதப்பட்டனர். - ஒருவன் கேட்கும் கேள்விகளுக்கு மற்றவன் பதில் கூற முடியுமா? எனவே இருவருக்கும் அயல்மொழி தெரிந்தும் கூட ஏன் பேசவில்லை? விளங்கிய படியால் தானே ஒருவன் பேச்சு இன்னொருவனுக்கு விளங்கியது.

ஆனால்- தமிழனை நினைத்த தமிழ்ராசனுக்கு அறிவழகனைப்போல இன்னும் தமிழன் என்ற போர்வையில் வாழும் அன்னியர்களை மக்கள் இனம் கண்டு கொண்டு அவர்களுக்கு நல்ல பாடம் புகட்ட வேண்டும்.

அப்பொழுது பாவேந்தர் பாரதிதாசனின் சில வரிகள் ஞாபகத்திற்கு வந்தன- பரிமேலழகர் செய்த உரையில் தமிழரைக் காணுமாறில்லை - தமிழரின் எதிர்ப்புறத்துள்ள இனத்தார் மேன்மையின் செருக்கே கண்டோம் என்றார். (பாரதிதாசன் திருக்குறள் உரை)

"தமிழன் ஒருவன் தகுதி கண்டால்
அமிழ்துண்டது போல் மகிழ வேண்டும்
தமிழர்பால் ஒற்றுமை தழைக்க வேண்டும்
தமிழ் வாழ்ந்தால்தான் தமிழர் வாழ்வர்.
தமிழ் மீண்டால் தமிழர் மீள்வர்."

எனும் பாரதிதாசனின் கருத்தை என்றுதான் எம்மினம் உணரப்போகின்றனரோ தெரியாது என மன வருத்தத்துடன் அந்த முத்தமிழ் கலை மாலை அரங்கை விட்டு வீடு திரும்பினான்- தமிழ்ராசன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளாம்பழம்

விளாமரத்தில் விளாங்காய் காய்த்து கனிந்து மணம் பரப்பி நின்றது. அருகில் நின்ற புளியமரம் செல்லடிபட்டு அலங்கோலமாக கிளைகள் முறிந்து தொங்கிக்கொண்டு நின்றன. அணில்கள் விளாத்தியில் ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தன.

வீட்டில் படுத்திருந்த செல்வன் விளையாடுவதற்காக அயல் வீட்டு மோகனுடன் சென்றான். "அம்மா நான் மோகனுடன் விளையாடப்போறன் சாப்பாடு முடிந்ததும் கூப்பிடு அம்மா" என்று சொல்லிக்கொண்டே போனான்.

செல்வனும் மோகனும் விளையாடுவதற்கு பல விளையாட்டுச் சாமன்களை சேர்த்து வைத்திருந்தனர். அதில் சில 'ரின்போனிகளும்' பந்துகளும் இருந்தன.

"மோகன் வாறியா பக்கத்திவீட்டு மாமாவின் காணிக்குள் நல்ல விளாம் பழங்கள் பொறுக்கலாம்" என அழைத்தான் செல்வன்.

மோகனும் "அதற்கு என்ன, விளாம்பழம் தானே! ஓ நானும் வாரேன்" என குதூகலத்தில் ஆரவாரம் செய்தான். இருவரும் விளாமரத்தடியில் விளாம்பழங்கள் பொறுக்கிக்கொண்டு நின்றனர்.

இதோ கருத்த விளாம்பழம் இரண்டு உள்ளது. இரண்டும் எனக்குத்தான் என உரிமைகொள்ள- இல்லை இது எனது மாமாவின் காணி. இதில் ஒரு கறுத்த விளாம்பழம் எனக்கும் தான் என இருவரும் சண்டை செய்யத் தொடங்கினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செல்வா உனக்கும் ஒன்று, எனக்கும் ஒன்று" என செல்வாவிடம் ஒரு கறுத்த விளாம்பழத்தைக் கொடுத்தான் மோகன். செல்வாவுக்கு கொடுக்கும் பொழுது கறுத்த விளாம்பழத்தின் நூல் ஒன்று கொடி போல் இருந்தது.

மோகன் - "என்னடா, விளாம்பழத்திற்கு நூல் வராதே இது ஏதோ புதிதாக இருக்கின்றது. எதற்கும் எனக்கு ஒன்று தா" என்றான்.

"நீ - ஒரு பக்கம் இழு நானும் ஒரு பக்கம் இழுக்கின்றேன்" என இருவரும் அந்த நூலை இழுக்கத் தொடங்கினர்.

சிறிது நேரத்தில் ஐயோ அம்மா என்ற குரல் கேட்டு எல்லோரும் அந்த வளவுக்கு ஓடி வந்தனர். செல்வன் குண்டு வெடித்து பரிதாபமாக இறந்து கிடந்தான்.

மோகன் மட்டும் ஒரு காலைப்பறி கொடுத்தவனாக "அம்மா - வலி தாங்க முடியவில்லை" என கத்தியபடி இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டு இருந்தான். மோகனின் தாய், "அய்யே என்ரை பிள்ளையை அநியாயமாக கொண்டு போட்டாங்களே. இந்தச் சின்னஞ்சிறுசுகளுக்குத் தெரியுமோ இது கைக்குண்டு தான் என்று"அங்கு வந்த பெண்கள் ஒப்பாரிவைத்துக் கொண்டிருக்க கூடியிருந்தவர்கள் சேலைத் தலைப்பால் கட்டி மோகனைக் காப்பாற்ற தலைப்பட்டனர்.

அங்கு வந்தவர்களும் இரண்டு சிறுவர்களின் நிலையை எண்ணிக் கண்ணீர் சிந்தினர். கடவுளே இனிமேலாவது இப்படி ஒரு சம்பவம் வராமல் பார்த்துக் கொள்ளப்பா.

"எங்கட சின்னம் சிறுசுகளும் எங்கபோய் மாட்டிக்கொள்ளுதுகளோ தெரியாது" என்றவாறு அழுதுகொண்டு நின்றனர், அங்குவந்த ஊர்மக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித நேயம்

தெருவோரத்தில் முருங்கை மரம் நன்றாகக் காய்த்து இருந்தது.

"அட - இவ்வளவு காலமாக காய்க்காத முருங்கமரம் இந்த வருடம் நன்றாக காய்த்து, கொடி கொடியாகத் தொங்கிக் கொண்டு இருக்கின்றதே" என தெருவோரத்தில் நடந்து போகின்றவர்களின் கதை சுதாவின் காதில் விழுந்தது.

பேருந்தில் (பஸ்) பலத்த இடிபாடுகளுக்கு இடையில் சுதா தனது அக்காவுடன் பழனி முருகனை தரிசிப்பதற்குச் சென்றான்.

பழனியைச்சுற்றி தெருவோரம் எங்கும் சிறு- சிறுவியாபாரிகளும்- கடைவியாபாரிகளும்- பக்தர்களைத் தங்களிடம் சாமான்கள் வாங்க வருமாறு அழைத்தனர். இடையில் வெளிநாட்டிலிருந்து வருவோரை வழிகாட்டிகளும் அழைத்தனர்.

இடை இடையே மாலைகளும் மணிகளும் கடைகளில் தொங்கிக்கொண்டு இருந்தன. என்னதான் இருந்தாலும் முருகப்பெருமானுக்கு பழனியில் நின்றே கால் கடுத்து இருக்கும். பழனியைச்சுற்றி சின்னச்சின்ன மலைகளும் அருகில் காணப்பட்டன.

சுதாவும் அக்காவும் முருகனுக்கு பால் செம்புடன் முருகனை வழிபட ஒவ்வொரு படியாக ஏறத் தொடங்கினர்- சுதாவின் கண்ணில் வழி நெடுகவே அனாதரவாக விடப்பட்டோர், படிகளில் இருந்து பிச்சை கேட்பது அவன் மனத்தை மிகவும் புண்படுத்தி விட்டது-

'அட, என்னிடம் பணம் இருந்தால் இவர்களுக்கு எல்லாம் ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்து (கொடுக்கலாம்' என்ற சிந்தனையில் பழனியின் உச்சிமலையை அடைந்தான்.

பழனி மலையில் முருகன் இருக்கும் இடம் மிக அழகாக காணப்பட்டன. சுதாவின் கண்களைக் கொள்ளை கொண்ட பழனியில் தங்க முடிக்கோபுரம் பழனி முருகனை விட தங்கத்தையே அதிகம் பாதுகாப்பதுபோல் காத்து நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதாவுக்கு ஆச்சரியம் ஊட்டியது. இந்த நாளையில் ஆண்டவனுக்கே காவல் என்றால் இந்த நாட்டு தமிழ் மக்களின் நிலை என்னவாக இருக்கும் என்று யோசித்தான்.

அரோகரா சொல்லும் - பக்த கோடிகளுக்கு இடையில் மந்திகளும் உருண்டு புரண்டு பக்தரிடம் தேய்காய் முடிகளையும் கச்சானையும் வாழைப்பழங்களையும் வேண்டிக்கொண்டது.

சுதா பழனி முருகனின் தரிசனம் முடிந்த பின் திருப்படிகளில் - வழியில் அமர்ந்து இருக்கும் சில அனாதரவு அற்றவர்களுக்கு சில்லறைக்காசு போட்டால் நல்லதாம் என்ற ஐதீகத்தில் சில்லறைக் காசுகளைப் போட்டுக்கொண்டே படியில் இறங்கி வந்து கொண்டு இருந்தான்.

திருப்படிகளில் இருக்கும் சின்னச்சின்னக் குட்டிக்கடைகளுக்கு அருகில், பழனி முருகனில் உருவங்களும் - படங்களும் காட்சி அளித்துக்கொண்டு இருந்தது. அவன் - சில்லறைக் காசுகளைக் கொடுத்துக்கொண்டே வந்தான்.

சில்லறையைப் போட்டுத்திரும்பும் போது "ஐயா சாமி, நான் உங்களுடன் வாரன் எனக்கு ஒன்றும் வேண்டாம். ஒருவாய் சாப்பாடு வாங்கித் தர முடியுமா" என கேட்டார் அந்த நடக்க இயலாத அனாதரவான மனிதன் - அவன் சரி என தலை - அசைத்தான்.

அவன் அக்காவோ "இவங்களுக்கு காசைமட்டும் போட்டுவிட்டுவா என அதட்டல் குரல் வேறு. ஆனால் - அந்த இயலாத மனிதரோ "ஐயா தாயே உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்" என சொல்லிக்கொண்டே இருந்தார். சுதாவுக்கு சிறு சந்தேகம். முதலில் பார்க்கும் போது இல்லாத மனிதன் எப்படி திடீர் என வந்திருக்க முடியும்? இது பழனி முருகனின் வேலையா? நினைத்துக்கொண்டு அந்த இயலாதவருக்கு என்னிடம் இருக்கும் பணத்தில் ஒருவனுக்கு ஒரு வாய் சோத்துக்கு கருணை செய்யவில்லையே நான் என்ன மனிதன். பின்பு பணம் வந்தால் எப்படி எனக்கு கொடுக்க மனம்வருமா? அத்துடன் அடுத்தவர்கள் விட வேண்டுமே என மனம் நொந்தவாறு வீடு திரும்பினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புரியாத இரகங்கள்

அரசமர நிழலில் வயோதிபர் ஒருவர் முனிவர் போல நீண்ட தாடியுடன் காணப்பட்டார். ஊரில் உள்ள சின்னஞ்சிறிசுகள் அவரை தாடித்தாத்தா என நளினமாக கூப்பிடுவார்கள். ஆனால் பிடிக்காத ஒருசிலர் அவரைப் பரதேசி, ஆண்டிப்பரதேசி மாதிரி இருக்கின்றான் என வசைமொழியால் பாட்டுப்பாடுபவர்களும் உண்டு.

அருகில் - அரசமரத்திற்குக் கொஞ்சம் தள்ளி உள்ள மூன்றாவது வீட்டில் உள்ள சாந்தி மட்டும் யாரும் இல்லாத வேளைகளில் அந்த அரசடிச்சாமிக்கு தனக்கு கொடுக்கும் சாப்பாட்டில் கொஞ்சமாவது மீதப்படுத்தி கொடுப்பது வழக்கம்.

அரசடி முனிவர் யாருடனும் அதிகம் பேசமாட்டார். ஆனால் ஏதோ உளறிக்கொண்டு இருப்பார். சின்னப்பிள்ளைகள் விளையாட்டாக கல்லால் எறிந்தால் கூட அவர் தெரியாத மாதிரி இருப்பார். இதனைப் பார்ப்பவர்கள் இந்த உணர்ச்சி இல்லாத சடத்தை ஆண்டவன் ஏன் படைத்தான் என்றே சொல்வார்கள்.

மாதங்கள் கடந்தோடின. சாந்தி சாப்பாடு கொண்டு வந்து கொடுத்துவிட்டுப் போவதை அயல் வீட்டு ரோகினி பார்த்து விட்டாள். ரோகினி சாந்தியின் தாயிடம் வந்து, "சாந்தியின் போக்கு மிகவும் அசிங்கமாக இருக்கின்றது. அரசடி முனிவர் இவளை மயக்கி விட்டான். அதனால்தான் சாந்தி அரசடி முனிவருக்கு திருட்டுத்தனமாக சாப்பாடு கொண்டுபோய் கொடுக்கிறாள். சாந்தி யாரிடமும் கதைக்காத அரசடிகிழம் ஏன் சாந்தியிடம் மட்டும் கதைக்கவேண்டும்" என ரோகினி இல்லாத கதையைக் கட்டவிழ்த்து விட்டாள்.

ஊர் மக்கள் அனைவரின் காதுகளிலும் இக்கதை பரவியது. ஒரு சில இளைஞர்கள் திரண்டு அந்த அரசடி முனிவரை அடித்து துன்புறுத்தினர். அப்பொழுதும் அரசடி முனிவர் ஏதும் பேசாது, அடி வாங்கிஃபடி இருந்தார். இரத்தம் சொட்டு - சொட்டாக ஓடியது அதனையும் பொருட்படுத்தாது இருந்தார். பெரியவர்கள் வந்து மிரட்டியும் பார்த்தனர். ஆனால் அரசடி முனிவர் அசையவேயில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் அரசடி முனிவர் காதில் விழும்படியாக சாந்தியின் வீட்டுக்காரார் சாந்தியை அடித்து துன்பப்படுத்துவதைக் கேட்டவுடன் தனது கிழிந்த பையை எடுத்துக்கொண்டு சாந்தி வீட்டு வாசலுக்குப் போனார்.

அங்கே சாந்தியின் தாயார் "என்னடா, என் பெண்ணை மயக்கி வைத்திருக்கிறாய்" என வாய்க்கு வந்தபடி திட்டினார்.

ஊர்ச் சனமோ அந்த முனிவரை மறுபடியும் தாக்க தயாராகிவிட்டது.

அப்பொழுது தான் அரசடி முனிவர், "நான் நீங்கள் நினைக்கின்ற மாதிரி முனிவனோ பெண்களை மயக்குபவனோ அல்ல, பிள்ளை பிடிகாரனும் அல்ல. நான் தமிழன். நானும் எனது பிள்ளைகள், மனைவி எல்லோரும் இந்த வழியால் காரில் பிரயாணம் செய்த போது என் மூன்று பிள்ளைகளையும், என் மனைவியையும் என் கண்முன் துடிக்கத்துடிக்க வெட்டி இந்த அரசமரத்தடியில் தான் புதைத்தார்கள் இராணுவத்தினர். என்மகன் புலிவீரன்தான். நாட்டுக்காக என்மகனைக் கொடுத்த குற்றத்திற்காக இராணுவத்தால் தண்டிக்கப்பட்டேன்.

உங்களுக்குத் தைரியம் இருந்தால் உங்கள் பிள்ளைகளையும் நாடுகாக்க அனுப்புங்களேன். இதனை விடுத்து ஏன்? பெண் பிள்ளையை கொடுமைப்படுத்துறீங்கள், 'என்மகள்' மாதிரி இருப்பதால்தான் நான் சாந்தியுடன் மட்டும் கதைத்தேன். உங்களுக்கும் இப்படி ஒரு நிலை வந்தால் தான் பிள்ளைப்பாசம் என்ன என்பது புரியும்.

இதோ என்பிள்ளைகள். குடும்பத்தின் 'போட்டோ'. என் உயிர் இருக்கும்வரை இந்த அரசமரம்தான் எனக்குச் சொந்தம். என் பிள்ளைகள் உயிர்பிரிந்த இடத்தில் தான் எனது உயிரும் பிரிய வேண்டும்" என அரசடி முடிவர் கூற -

எல்லோரும் வெட்கத்தில் நாணித் தலை குனிந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வும் வளமும்

வானம் ஒரே மப்பும் மந்தாரமுமாகக் காணப்பட்டது. மரத்தில் உள்ள இலைகள் உதிர்வதற்கான கால அறிகுறிகளைக் காட்டி நின்றன. எதிரிலே போய்க் கொண்டிருந்த காருக்குள் இருந்த சிறுமி கை அசைத்து 'டாட்டா' காண்பித்தாள். அந்த அதிகாலை வேளையிலும் அந்தச் சிறுமி சுறுசுறுப்பாக இருப்பது காந்தனுக்கு வியப்பாக இருந்தது.

பாரீஸ் மண்ணின் வாசனையா? அல்லது அந்த மக்களின் சுறுசுறுப்பா என்று வியந்தவாறு தனது நண்பன் சேகரை மீண்டும்- மீண்டும் கேள்வி மேல் கேள்வி கேட்டான் காந்தன்- "என்ன சேகர் இந்த பிரான்சில பார்க்கின்ற பக்கமெல்லாம், உயர்ந்த கட்டிடங்களும், வாகனங்களுமாக இருக்கின்றன. நாடும்- மக்களும் எவ்வளவு ஒன்றி உழைக்கின்றார்கள். இப்படி எல்லோ எங்கள் தமிழீழமும் இருக்க வேண்டும்" என்றான் காந்தன்.

சேகர்- காந்தனின் வாயைத்தடுத்தவனாக, "ஏன்டா மச்சான். எங்கடை சனங்கள் எங்கை போனாலும் திருந்துவது கிடையாது. தமிழ்- தமிழ்- என்று கத்துவாங்களடா? யாரடா- காந்தன் ஒற்றுமையாக இருக்கிறார்கள். யாரடா- மச்சான் நாட்டைப்பற்றி சிந்திக்கிறாங்கள். எப்ப போய் பிரான்சுக்காரனுக்கும் இத்தாலிக்காரனுக்கும் சீனாக்காரனுக்கும் கோப்பை கழுவலாம் என்றுதான் முதலிடத்தில் நிற்கிறார்கள்."

"அப்படிச்சொல்லாதடா சேகர்"

"பின்னை - எப்படியடா - சொல்லச்சொல்லுகிறாய். நான் பிரான்சுக்கு வந்து ஒரு சில மாதந்தான் ஆகின்றது. ஆனாலும் எங்கடை ஆக்கள் எவ்வளவுக் கெட்டிக்காரர்கள் என்பதை பார்த்தால் புரிந்துகொள்ளலாம்."

"இந்த குட்டி யாழ்ப்பாணம் 'லாச்சப்பல்ல' ஒரே இடத்தில் கடைகள் திறப்பதும் உலகிலே பிரான்சில் முக்கியமான 'கார்டிநோட்டில்' தமிழன் கடைகள் வைத்திருப்பதும் ஒரு சாதனைதான் மச்சான்"என்றான் காந்தன்.

"இதுகள் எல்லாம் செய்தால் தமிழன் என்ன பெரிய வளர்ச்சி வளர்ந்திடுவானா?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அப்படி இல்லையாடா சேகர் - ஒரு பாவலர் ம.அரங்கநாதன் பாடி இருக்கிறார். இப்ப இதைக்கேளு. இறைமுன்னும் தமிழில்லை. திருமணத்தில் தமிழில்லை, இயங்கு வாழ்க்கைத் துறைதோறும் வடமொழிக்கே சிறப்பென்றால், தமிழுருயிர் துறத்தல் நன்றே! என்னதான் நாம் செய்தாலும் நமக்கு என்று ஒரு மொழி தமிழ்மொழி இருக்கின்றது. அதனையும் தமிழனுக்கு எங்கெல்லாம் துன்பம் நேர்ந்தாலும் குரல் கொடுக்க ஒரு நாடு வந்தாகவேண்டும்.

“இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படி நாடோடியாக அலைந்து திரிவது. எந்த நாட்டிலும் நாங்கள் பெருமையாக வாழ்ந்து என்ன பயன். பிறந்த மண் அன்னியனுக்கு அடிமைப்பட்டு கிடக்க- முதலில் தமிழீழம் கிடைக்க வேண்டும். அப்பொழுதுதான் மண்ணுக்காக மரணித்த மாவீரர் கனவுகள் நனவாகும். அதுமட்டுமல்ல முதலில் நமது தமிழ் மக்கள் திருமணத்தில் தொடங்கி ஆலயம் வரை தமிழ்முழங்க வேண்டும். இன்னும் சிலர் தமிழராக இருப்பதாக நடித்துப் பயனில்லை. அவர்கள் திருந்தி தமிழனாக வாழவேண்டும்.”

“எங்கடைமக்கள் இங்கிலீசும். பிரெஞ்சும்தான் வாழ்க்கை என்று நினைப்பதை தவறு என்பதை முதலில் அடியோடு அழிக்க வேண்டும். வெளிநாட்டு தமிழன் தமிழனை மதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும். தமிழன் முதலில் தமிழை மதிக்க கற்றுக்கொள்ள வேண்டும். அதைவிட்டு காசுதான் வாழ்க்கை என்றால் தமிழ்ச் சந்ததியை காசு காப்பாற்றுமா?” என காந்தன் சேகரைக் கேட்டான்.

மௌனமானான் சேகர் “நீ சொல்வது சரிதான். எல்லாத் தமிழரும் ஒன்று பட்டு நமது நாட்டு விடிவுக்காகவும் தமிழ் வளர்ச்சிகாகவும் குரல் கொடுப்போம்” என்றான். அதற்குள் காந்தன் இறங்கும் கடுகதிப்புகையிரத தரிப்பிடத்திற்கு வந்து சேர்ந்தனர்.

‘இந்த தமிழனின் நாடோடி வாழ்க்கைக்கு தமிழனுக்கு என்று ஒரு நாடு கிடைத்தால்தான் தமிழ் இனத்திற்கே நிம்மதி’ என நினைத்தவாறு புகையிரத்தில் ஏறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம்

அம்மன் கோயில் பூசை ஆரம்பவாதற்கு முன்பு தேவாரங்களும் திருவாசகங்களும் தமிழில் இராகதாளத்துடன் வந்திருந்த பக்தர்கள் நெஞ்சுருகப் பாடினார்கள்.

அங்கே தனது பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வந்து அம்மன் பக்தர்களுடன் சேர்ந்து தானும் தேவாரம் பாடினார்_ வேலன்.

வேலன் மகள் செல்வி_ அம்மன் ஆலயத்தில் இருக்கும் ஒவ்வொரு திருவுருவங்களைக் காட்டி "அப்பா இந்த 'அன்ரி' நல்ல வடிவாக சேலை உடுத்தி தாமரைப்பூவுக்கு மேலே இருக்கிறா_ அப்பா - ஏன்? இந்த 'அன்ரி' மட்டும் இருக்கவேண்டும்? எனக்கும் இருக்க ஆசையாக இருக்கிறது" என - மெல்லமாக வேலன் காதில் சொன்னாள் செல்வி.

"இப்ப நல்ல பிள்ளை மாதிரி இருக்க வேண்டும். பூசை முடியும் வரை சத்தம் போடக்கூடாது. இல்லாட்டி சாமி வந்து - வெருட்டும் " என்றார் வேலன்_ அருகில் இருந்த அம்மன் பக்தன் கேட்டு விட்டு மெல்லமாக சிரித்தார்.

சில மணி நேரங்களின் பின்பு - மெல்லமாக திரைச்சீலை விலகியது_ பூசை ஆரம்பமாவதற்கு மணி அடித்தது_

பக்தர்கள் எல்லோரும் அரோகரா_ அரோகரா என்ற கோசத்துடன் எழுந்து பயபக்தியுடன் நின்றனர்_

முதலில் விதி முறைப்படிநடப்பது பிள்ளையார் பூசை தானே! பூசகர்_ மணியைக் குலுக்கியபடி முறையே தீப ஆராதனைகள் செய்தார்_

செல்வியால் இருப்புக்கொள்ள முடியவில்லை. யேர்மன் மண்ணில் பிறந்த செல்விக்கு ஒன்பது வயது என்றாலும் தமிழாலயத்தில் கல்வி கற்பதனால் செல்வியை தமிழ் அறிவுச்செல்வி என்றே சொல்லலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசைசெய்வதை அவதானித்த செல்விக்கு பூசகர் சொன்ன மந்திரம் ஒன்றும் விளங்கவில்லை. மெதுவாக தகப்பன் வேலனின் கைகளைச் சுரண்டினாள். "அப்பா-அப்பா-என்னப்பா- இந்த மாமா என்ன மொழியில் பூசை செய்கிறார்- இந்த மாமாவை எங்களுக்கும் விளங்குமாறு பூசை செய்யச் சொல்லுங்கோ அப்பா" என்றாள் செல்வி.

வேலன் முகம் திடீர் என மாறியது. "உன்னை இதுக்குத்தான் ஒரு இடமும் கூட்டிக்கொண்டு போவதில்லை. எல்லாம் உனக்கு புதினமாகத்தான் தெரிகிறது. எனக்கே பூசகர் சொல்வது விளங்கவில்லை. அப்படி இருக்க, உனக்கு எப்படி விளங்கும். இங்கு சாமி கும்பிடும் அனைவருக்கும் ஒன்றுமே விளங்கவில்லை செல்வி" என்றான் வேலன்-

செல்வி- "என்னப்பா- சேச்சுக்கு போனால் எல்லாம் தமிழில் தானே அப்பா பூசை செய்கின்றார்கள்- என்னோடு படிக்கும் 'கிளவடியாள்' கூட சேச்சில நடக்கிற பூசைகளை பாடமாக்கி சொல்லுகிறாள். எனக்குத்தான் தேவாரத்தைத்தவிர ஒன்றும் தெரியாது அப்பா" என செல்வி கவலையாகச் சொன்னாள்-

அப்பொழுதுதான் - வேலனின் மனத்தில் கேள்விக்கணைகள் அம்பாகப் பாய்ந்தது- 'நாம் தமிழர்' ஏன் கோயில்களில் வேற்று மொழியில் பூசை நடக்க வேண்டும். செல்வி கேட்டதில் என்ன தப்பு இருக்கிறது? தமிழன் முன்னேற்றத்திற்கு இத்தனை தடைகள் ஏன்?. ஏனைய மொழிக்காரார் தங்கள் மொழிகளில்- எல்லாக்காரியங்களும் பார்க்கின்றனர்- தமிழனுக்கு மட்டும் தான் இந்த சாபக்கேடா?

தமிழ்மக்கள் விழிப்புணர்வு பெற்றால்தான் தமிழ் மொழியால் எல்லாம் ஆகும் என்ற நிலை வரும். இல்லை என்றால்- தமிழர் மதம் வெளிநாடுகளில் மொழி விளங்காது அழிவு நிலையே ஏற்படும்.

'பூனைக்கு யார் மணி கட்டுவது' என்ற நெருடலான கேள்வியுடன் அம்மன் கோயில் பூசையை முடித்துக்கொண்டு வீடு திரும்பினார் வேலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு பிறப்பு

மேகக்கூட்டங்கள் ஒன்றோடு ஒன்று மோதின. மேகலா அருகில் இருந்த மரத்தைப் பார்த்தவாறு இருந்தாள்.

'இப்படி எனக்கும் பறக்கும் சக்தி இருந்தால் நானும் சுதந்திரமாக பறந்து போவேன். எனக்கு இறைவன் ஏன்? இப்படி ஒரு வாழ்வு தந்தான்' என நினைத்தபடி இருக்க.

தாய்ப்பறவை தன் குஞ்சுகளுக்கு இரை கொண்டு வந்து அந்த மரக்கிளையில் அமர்ந்தது. குருவிக்குஞ்சுகள் - சொண்டை திறந்தவாறு தாயிடம் உணவை வாங்குவதிலே சிரத்தையாக இருந்தன. அருகில் எப்பொழுதும் வழக்கத்திற்கு மாறாக ஒரு ஆண்குருவி வந்து அந்தக் கிளையில் அமர்ந்தது.

மேகலாவின் பார்வை அந்த ஆண்குருவி மேல் விழுந்தது. பறவை இனங்களுக்குக் கூட ஒன்றின் மேல் ஒன்று எவ்வளவு அக்கறையாக இருக்கின்றன. மனிதன் மட்டும் எல்லாவற்றிலும் வேற்றுமைகளையே உருவாக்கி அதிலே இன்பம் காணுகின்றான். என நினைத்தாள்.

அப்பொழுது அவளின் மாமி தமிழினி வந்து, "என்ன மேகலா இப்படியே அந்த ஜன்னலையே எட்டிப்பார்த்தால் என்ன முடிவு. 'என்மகன்' பரன் மறைந்த நினைவு நாளும் நெருங்குகின்றது. என் பிள்ளை இருந்தால் நீ இப்படியே இருந்திருப்பாய். சீவிச் சிங்காரிச்சு இன்று எல்லா இடமும் சுற்றி வந்திருப்பாய். அவனும் கார் விபத்தில் போக வில்லை என்றால் இந்த வீடு எவ்வளவு கலகலப்பாக இருந்திருக்கும். இந்த சின்ன வயதில் மேகலா உனக்கு இப்படி ஒரு சோதனையா? இதைப்பார்த்து என்மனம் தினம் வேதனைப்படுகின்றது. என்று உனக்கு மறுமணமே அன்றுதான் எனக்கு நிம்மதி."

"மாமி எனக்கு மறுமணம் வேண்டாம். எனக்கு பரன் நினைவே வாழ்வதற்கு போதும்" என மாமியாருக்கு பதில் கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாமி தமிழினி சொல்லைக் கேட்டுக் கொண்டே சமையலறைக்குச் சென்றார்.

மேகலா முன்னே பரன் நிற்பது போன்று தோன்றியது

பரன் அணைப்பது போன்று ஒரு உணர்வு அவளுக்கு இருந்தது. மாமி குரல்கேட்டு மீண்டாள்.

மீண்டும் பரன் கதைப்பது போலவே உணர்வு தோன்றியது.

"மேகலா நான் இல்லை என்று ஏங்க வேண்டாம் - எனக்காக இன்னும் எத்தனை காலம் இப்படி வாழப்போகின்றாய். இப்படியே உன்னை நீ அழித்துக் கொள்ளாதே! இன்னொரு திருமணம் புரிந்து நன்றாக வாழ வேண்டும். அதற்காக நீ ஊர் என்ன சொல்லும் என்று யோசிக்க வேண்டாம்.

"மனிதன் உணர்வுகளால் பின்னி பிணைக்கப்பட்டவன். வெளியிலே நல்லவர்களாக இருக்கலாம். எத்தனை நாளைக்குத்தான் உன்னால் இந்த உணர்வுகளைக் கட்டுப்படுத்த முடியும். மனிதப்பிறப்பு மகிழ்வாக வாழ்வதற்கே தவிர உணர்வுகளைக் கொலை செய்வது; வாழ்வதற்கல்ல - நீ மறுமணம் செய்து கொள். அதுவே நீ என்மீது வைத்திருக்கும் அன்புக்கு அடையாளம்" என கூறி மறைந்தான் பரன்.

மேகலா நினைவுலகத்திலிருந்து மீண்டும் உலகிற்குத் திரும்பி வந்தாள். இப்படியே உணர்வுகளைக் கொலை செய்து வாழ்வதை விட மறுமணம் செய்து வாழலாம் தான். ஊர் உலகம் என்று நினைப்பதை விட என் மறுமணத்தில் பரன் மகிழ்வான். இந்த உலகம் உள்ளவரை பெண்கள் துணையைப் பிரிந்து வாழ்வதை விட, துணையோடு வாழ்வதே மேல் என நினைத்தாள்.

"பிள்ளை நாளைக்கு பெண்பார்க்க வருகினம். அதற்கு ஆயத்தமாக இரு மேகலா" என மாமி குரல் அவள் காதில் வந்து விழுந்தது. பதில் ஏதும் கூறாதவளாய் மேகலா நாணத்துடன் அறையை நோக்கி ஓடினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலை

கோடைகாலம் ஆகையால் மரங்களில் வசந்த காலத்திற்குரிய மகிழ்ச்சி காணப்பட்டன. ஒரு மரம் பூப்பூக்கும் என்றால்- இன்னொரு மரம் இலைதுளிர் விட ஆரம்பிக்கும். உறங்கு நிலையில் இருந்த மரங்கள் கோடைகாலத்தில் தான் புதிதாக சேலை உடுத்திக் கொள்ள ஆரம்பிக்கின்றன.

வல்லவனுக்கு இந்த இயற்கையைப் பார்க்கும் போது - அறியாமலே தன்னை மறந்து விடுவதுண்டு. இந்த இயற்கைக்கு இருக்கும் மகிழ்ச்சி கூட தனக்கில்லையே என்று. சகோதரங்களுடன் பிறந்திருந்தால் அதுவும் பெண் சகோதரங்களுடன் பிறந்து விட்டால் தமிழன் வாழ்க்கை கேட்கவே தேவையில்லை. அதற்குள்ளும் அவன் வெளிநாட்டில் இருக்கின்றான் என்றால் இன்னும் சொல்லவா வேண்டும்-

கூடப்பிறந்த உடன் பிறப்புக்களுக்காக உழைத்து உழைத்து தேய்ந்த கரங்கள்தான் வல்லவன் கரங்கள்-

ஏழு பெண் சகோதரங்களுக்கும் நல்ல மாப்பிள்ளை பார்த்து கட்டி வைப்பதிலே வல்லவனின் நாட்கள் கடந்தன.

காலையில் நிழல் உருவம்காட்டும் கண்ணாடியில் பார்க்கும் போது தான் காதோரங்களில் நரைத்த மயிர் தென்பட்டதைக் கண்டான்.

வயது நாற்பதை அடைந்து விட்ட அவனுக்கு எந்தச் சகோதரங்களும் நல்ல பெண்ணாகப் பார்த்து கட்டி வைக்க வேண்டும் என்ற உணர்வு யாருக்கும் இல்லாது இருந்தது.

வல்லவனின் நினைவலைகள் புயலாகப் பறந்தது. 'என் இளமையும் இழந்து தலைமயிரும் நரைத்து சாவு மணி அடிக்கின்றது. இந்த உடன் பிறந்த சகோதரங்களில் ஒருவர் தன்னும் என் திருமணத்தைப்பற்றி நினைக்கவில்லை. இன்று எல்லோரும் நல்லாக இருக்கிறார்கள்-என்னைக் கவனிக்க ஒரு துணையும் இல்லையே' என கவலைப்பட்டான்.

'ஆற்றில் போட்டாலும் அளந்து போடச்சொல்லி சொல்லுவார்கள். உடன் பிறப்புக்களை இந்தப் பிறவியில்தான் காண முடியும் என்றும் சொன்னார்கள். ஆனால் இந்தப் பிறவியில் செய்த நன்மைக்கு இந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறவியிலே நல்ல பலனை அடைந்து விட்டேன். எனக்கு என்று ஒரு மனைவி இருந்திருந்தால் எனக்கு வயது போகின்ற காலங்களில் எனக்கு ஒரு துணையாக இருந்திருப்பாள். ஆனால் உடன் பிறப்பு என்று எண்ணி செய்த செயல் எல்லாம் விழலுக்கு இறைத்த நீராக மாறிவிட்டதே'

கண்கெட்ட பின்னே எனக்கு ஞானம் வந்து என்ன பயன். இனி யார் என்னைத் திருமணம் செய்து கொள்ளப் போகின்றாள். என் உடன் பிறப்புக்களுக்காக மாடுமாதிரி உழைத்து செலவு செய்தேன்.

குடும்பச் சுமையைச் சுமந்து சுமந்து என் மனம் கூட சுமைதாங்கியாக மாறிவிட்டது.

எனக்கு இனி எப்பொழுது திருமணம் நடக்கும்? பணம் இருக்கும் வரைதான். பின்னும் முன்னும் அண்ணா என்று தங்கைகள் கூட என்னைத் தேடி வரவில்லையே.

இறைவா அடுத்த பிறப்பிலாவது. எனக்கு குறித்த நேரத்தில் திருமணம் நடக்க அருள் தாரும் ஐயா' என நினைவிலிருந்து மீண்டான் வல்லவன். வாசல் மணி அழுத்தும் சத்தம் கேட்டது. மோகன் வரும் காலடி ஓசை கேட்டது. "என்ன மச்சான் வல்லவன் எப்படா உனக்கு கலியாணம். நல்ல அழகான பெண்ணாக பார்த்து சொல்லட்டுமா" என கேலியாக கேட்டான். மோகன்.

மோகன் வார்த்தைகளைத் தடுத்தவனாக, "உனக்கும் குடும்பம் அக்கா தங்கச்சி என்று இருந்திருந்தால் என்னை விட மோசமான நிலையாக இருந்திருக்கும். அதனால உனக்கு என்னைப் பார்க்க ஏளனமாக கிடக்குது" என்றான் அவன்.

"என்று எங்கள் சமுதாயத்தில் பிடித்த சீதன நோய் ஒழியுதோ அண்டைக்குத்தான் என்னைப் போன்ற ஆண்களுக்கும் சாகும் முன்பு இளமையில் திருமணம் நடக்கும். இல்லை என்றால் தினம் தினம் சகோதரங்களை நினைத்து எங்கள் உணர்வுகளுக்கு நாங்களே மரணதண்டனை கொடுத்துக்கொண்டு இருக்க வேண்டிய இந்த நிலை எப்பதான் எங்கள் சமுதாயத்திலிருந்து மறையுமோ தெரியாது. கூடப்பிறந்த சகோதரிக்காக என்னைப் போல எத்தனை அண்ணன்மார் உணர்வுகளை கொலைசெய்கின்றார்கள் தெரியுமோ மோகன்" என்றான் வல்லவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை

தென்னை மரம் தனது குருத்தோலைகளைப் பரப்புவதற்கும் வளர்வதற்கும் உரிய அறிகுறிகள் தென்பட்டன. தேங்காய்கள் குலைகுலையாகத் தொங்கிக்கொண்டு இருந்தன. அரசமரமும்-தென்னையும் வளர்வதிலே போட்டி போட்டுக் கொண்டு நின்றன.

சுதன்- பல வருடங்கள் வெளி நாட்டிலே வாழ்ந்து விட்டு ஊர் திரும்பினான். அன்று அவன் பார்த்த ஊருக்கும் இன்று பார்க்கும் ஊருக்கும் நிறையவே வேற்றுமைகள் இருந்தன.

திரும்பும் இடமெல்லாம் குண்டடிபட்டு சுவர்கள் ஒரே பள்ளமும் மேடுமாக புதிய சித்திரம் வரைந்து இருந்தது போல் காட்சி அளித்தது. தமிழனின் பொருளாதாரத்தை அழித்து விட்டு அலங்கோலமாகக் காணப்பட்டது கட்டிடங்கள். இந்தச் செல்லடிக்குள்ளும் மக்கள் சென்று கொண்டு இருப்பதே தமிழ்மக்களின் அன்றாட வாழ்க்கை ஆகிவிட்டது. இதனை சுதன் அவதானித்துக் கொண்டிருந்தான்.

சுதனுக்குப் பெற்றோர்கள் பெண்பார்க்கும் படலம் தொடர்ந்தது.

சில நாட்கள் கடந்தன. சுதன் பள்ளியில் படிக்கும் போது மிக கெட்டிக்காரியாக இருந்த தேவியை பலசரக்குச் சாமான்கள் வாங்கும் கடையில் சந்தித்தான். தேவியுடன் இதுவரையில் சுதன் பேசியதே இல்லை. தேவி சிரித்து விட்டு எப்படி வெளிநாட்டு வாழ்க்கை போகின்றது என பேச்சுக் கொடுத்தாள்.

“பாடசாலையில் இரு துருவங்களாக இருந்த தேவியா இப்படி கதைப்பது” என சுதன் ஆச்சரியப்பட்டான்- சுதன் தேவியின் கேள்விக்குப் பதில் கூறியவனாகத் தொடர்ந்தான்.

சுதன் தேவியைப் பார்த்து “நான் திருமணம் செய்து கொண்டுபோவதற்கு வந்திருக்கின்றேன். எப்படியும் இன்னும் ஒரு வாரத்திற்குள் நான் லண்டனுக்கு சென்று விடுவேன். அதற்குள் நல்ல பெண்கிடைத்தால் சரி” என தேவிக்கு கூறினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி, "அது சரி நீங்கள் எந்த இனத்தில் பெண் எடுக்க விரும்புகிறீர்கள். உங்கள் சாதியிலா? அல்லது வேறு வேறு சாதியிலா" என சிரித்தவாறு கேட்டாள்.

"தேவி, நான் மனித சாதியை கலியாணம் செய்ய விரும்புகிறேன் அதற்குள்ளும் தமிழ்ச்சாதியை கலியாணம் செய்ய விரும்புகிறேன். சாதியில் எனக்கு நம்பிக்கை இல்லை. தமிழனை திட்டமிட்டு அழிக்க வெளிநாட்டான் ஏற்படுத்திய சதி. உதரணத்திற்கு நீங்கதான் உயர்ந்த சாதி - நீங்கள் என்னை விரும்பாவிட்டாலும் ஏன் கதைக்கிறோம். பள்ளியிலே கதைக்காத இருவரும் ஏன் இப்பொது கதைக்கின்றோம். எங்களுக்குள்ளே இருந்த அறியாமை விலகியதால் தானே !"

தேவிட சிரித்து விட்டுச் சென்றாள்.

மறுநாள் தேவியின் அண்ணன் குமார், பெற்றோர்கள் சுதன் வீடுதேடி வந்தனர்.

சுதனின் வீட்டுக்காரருக்குப் பயம் எடுத்தது. இருந்தும் இன்முகம் காட்டி வரவேற்றனர். சுதனுக்குப் பெண் பார்ப்பதாக தேவி கூறினாள். சுதனும், நீங்களும் விரும்பினால் என் பிள்ளை தேவியை உங்கள் பிள்ளைக்கு கட்டிக்கொடுக்கலாம் என்ற முடிவைத் தெரிந்து கொள்ள வந்தோம் என்ற விடயத்தைக் கூறினார்கள் தேவியின் பெற்றோர்.

சுதனின் சீர்திருத்த சிந்தனையை விரும்பிய ஆசிரியை தேவி சாதகம் பார்க்காது அம்மன் கோயிலில் ஆம் அல்லது இல்லை என சீட்டுக்குலுக்கிப்பார்த்து அம்மன் சுமமதத்துடன் ஒன்று சேரமுடியாத தாழ்ந்த இளைஞன் சுதனை தேவி கைப்பிடித்துக்கொண்டாள்.

தமிழன் திட்டமிட்டு வீழ்த்தப்பட்டதைக் கேட்ட தேவி தமிழ் இனத்தின் விடிவுக்காக தனது பணியைத் தொடர்ந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவிப்பு

வீட்டு முற்றத்தில் நின்ற மாமரத்தில் மாங்கனிகள் கொடி கொடியாகத் தொங்கிக்கொண்டிருந்தன.

வீட்டிற்கு வருபவர்களும் போகிறவர்களும் அந்த மாமரத்தைப் பார்த்து 'வாய் ஊறாதவர்கள் இல்லை'. அட கந்தசாமிக்கு இந்த முறை நல்ல யோகம் அடிக்கப்போகுது என மக்கள் பேசுவது அவர் காதில் விழுந்தது.

கந்தசாமிக்கு ஒரே கவலை. இனி எப்பொழுது ஆமிக்காரர் அடிப்பார்கள். எப்பொழுது ஓடுவமோ தெரியாது என்று சிந்தித்தவாறு இருப்பார். சிறிய வாகனச்சத்தம் கேட்டாலும் கூட அவர் முதலில் சைக்கிளைத் தூக்கத் தொடங்கிவிடுவார். அப்படி பயந்த சுபாவம் உடையவர் கந்தசாமி.

நீண்ட நாட்களின் பின்பு கந்தசாமியின் நண்பன் கோபாலன் தேடி வந்தார். கோபாலன் வீட்டுப் படலையைத்திறக்க நாய் குலைகக கந்தசாமி "யார்? - அது" என குரல் கொடுத்தார்.

"கந்தா- நான் தான் கோபாலன் என சிரித்தவாறு, நாயை "டேடே தள்ளிப்போ. உனக்குக் கூட ஆட்களைத் தெரியாது போல இருக்கு" என்றபடி உள்ளேவர, கந்தசாமி தாமரைப்பூ இதழ் விரித்தமாதிரி வாய் அகலச்சிரித்தபடி "கோபாலு உனக்கு செல்லடியில் நாய்க்கு கூட பயம் வந்துட்டுது என்றால் மனிசரை நினைத்துப்பாரன்" என்றார் கந்தசாமி.

"அது சரி வந்த விசயம் என்ன?" என்று விசாரித்தார்.

உன்னுடைய மூத்த மகள் பிரியாவுக்கு நல்ல இடத்தில் மாப்பிள்ளை வந்து இருக்கு. நல்ல இடம். நீ விரும்பியபடி படித்த உள்ளூர் மாப்பிள்ளை. மிகுதி நீ கமக்காரன் நாட்டு நிலவரத்தால் பெரிய மோசமான நிலைப்பாடு என்பது தெரியும். இருந்தாலும் உன்னுடைய கௌரவத்திற்கு ஏதாவது கொடு. ஆனால் உன்னுடைய பெண்ணைத்தான் திருமணம் செய்வதாக மாப்பிள்ளை குடும்பம் இருக்கின்றார்கள்" எனக் கூறிவிட்டு கோபாலன் திரும்பினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணம் கந்தசாமி விருப்பப்படி முடிவாகியது, எல்லோரும் திருமண ஏற்பாட்டில் உற்சாகமாகவும் மகிழ்வாகவும் இருந்தனர்.

திருமண நாள் நெருங்கிக்கொண்டிருந்தது. கந்தசாமிக்கு நல்ல சந்தோசம். தனது மகளின் திருமணத்தைப் பார்க்க போகின்றோம் என்ற மகிழ்வில் திருமண ஏறபாடுகள் செய்து கொண்டிருந்தார்.

மறுநாள் காலை மங்கல் இருளுடன் தனது வெங்காயத் தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச சென்றார். தோட்டத்தில் அரைவாசிக்கு மேல் தண்ணீர் இறைத்து முடிய ஆதவன் தன் பொன்கரங்களைத் தழுவ நிலமெல்லாம் இருள் விலகத் தொடங்கியது.

அருகில் திரும்பிப்பார்த்தார் கந்தசாமி. யாரோ ஓர் இளைஞனைக் கைகளைக் கட்டிப்போட்டு வெட்டி இரத்தம் சிந்தியவாறு அருகிலுள்ள தோட்டத்தில் கிடப்பதைக் கண்டார். உடனே தண்ணீர் இயந்திரத்தை நிறுத்திவிட்டு ஓடிப்போய் பார்த்தார். அந்த இளைஞன் இறந்து விட்டான். ஒரு தமிழனுக்கு இதுதானா? இன்றைய நிலை என்று அழுதவாறு அயல் தோட்டக்காரர்களுக்குச்சொல்லி விட்டு வீட்டுக்கு ஓடினார். அதற்குள் ஊரே தோட்டத்தில் வேடிக்கை பார்க்கக்கூடிய சிறிது நேரத்தில் குண்டுவீச்சு விமானங்கள் வட்டமிட்டுக் கொண்டு நின்றன. மக்கள் கூட்டமாக நின்றதால் இராணுவம் குண்டுகளைப் போட்டது.

மக்கள் சிதறி ஓடினார்கள். ஆனால் ஒரு சிலர் குண்டு வீச்சுக்குப் பலியானார்கள். தோட்டத்தின் மூலைக்கு மூலை ஒரே ஒப்பாரியாக இருந்தது. கந்தசாமி வீட்டைவிட்டு ஓடிவந்தார். தனது திருமணப் பெண்ணான மகள் பிரியா பரிதாபமாக இறந்து கிடப்பதைக் கண்டார். அவரது மனநிலை பாதிக்கப்பட்டது போல "பிரியா. பிரியா" என புலம்பினார்.

"திருமணக் கோலத்தில் கண்கொள்ளாக் காட்சியாகக் காண எவ்வளவு கனவு கண்டேன் அம்மா. இப்படி எங்களைப் பரிதவிக்கவிட்டு விட்டியே அம்மா பிரியா. அப்பாவுக்கு சாப்பாடு எப்பவும் கொண்டு வருவியே. இப்போது நீயே சாப்பிடாமல் போய்விட்டியே, அம்மா" என அழுதுகொண்டே இருந்தார் கந்தசாமி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னொளி

அயல் வீட்டுமல்லிகையின் வாசம் வந்த திசையைப் பார்த்த குகன் விளையாட்டுத்தனமாக "அம்மா, பக்கத்து வீட்டு மல்லிகையின் வாசனை எவ்வளவு தூரத்திற்கு மணம் வீசுகின்றது. வெளியே வந்து, "தென்றலோடு கலந்த வாசனையை மணந்து பார்'' என குகன் தன் தாயை மிக அவசரமாக அழைத்தான்.

''குகா, மல்லிகையின் வாசனை இருக்கட்டும். முதலில் அம்மாவின் சொல்லைக்கேளு, சில மணி நேரத்திற்கு முன்பு தான் அப்பா வந்து போனவர். இப்ப வரவர நாட்டுப்பிரச்சனை அதிகமாகுது. எங்கள் உயிருக்கு உயிராக, இருக்கின்றவன் நீ ஒருத்தன் தானே. ஏதோ ஒரு வெளிநாட்டுக்குப் போய் நீ உயிரோடு இருந்தால் போதும் என்று கூறிவிட்டு போனார் உன் அப்பா.

''ஏதோ இருக்கிற கொஞ்ச பணத்துடன், இருக்கும் காணியையும் ஈடு வைத்து அனுப்புகின்றேன். நீ வெளிநாடு போய் இருக்கின்ற இரண்டு தங்கச்சிமார்களையும் கரை சேர்த்தால் போதும்.

''குகா_ அப்பாவுக்கும் ஒரு கால் விளங்காது. ஏதோ தன்னால இயன்ற அளவு இந்த வயசிலும் கடுமையாக வேலை செய்து உழைக்கின்றார் '' என வேத வாக்காக குகன் காதில் அம்மா ஓதினாள்.

காலங்கள் கடந்தோடின. குகன் ஐரோப்பிய யேர்மன் மண்ணில் வாழத் தொடங்கினான். குகனுக்கு தேவன், சிவா, மோகன் நண்பர்களாக ஆனார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன் மிகவும் நல்லகுணமுடையவன். "குகா அம்மாவைப் பற்றி தினமும் புராணம் பாடுவியே. யேர்மன் வந்து ஐந்து வருடமாகிறது. இரு தடவைகளுக்கு மேல் நீ கடிதம் போடவில்லை. அவர்கள் கடிதத்திற்கு மேல் கடிதம் போட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இப்படியே 'பியரும்' கையுமாக இருந்தால் உன்னுடம்பு கெட்டுவிடும். டேய் கொஞ்சம் என்றாலும் உன்னை நீ நம்ப முயற்சி செய். ஏன்டா இப்படி நல்ல இளமையை சாகடிக்கின்றாய்".

இடையில் குறுக்கிட்ட தேவன், "குகா இவன் வேதம் படித்தவன் போல் அலட்டுகிறான். இந்த இளமையில் இதுகளை அனுபவிக்காமல் இனி என்ன கிழவனாக வந்த பிறகா அனுபவிக்கிறது சொல்லு மோகன்."

"நான் அப்படி சொல்ல வரவில்லை. குடியுங்கோ அதற்காக எல்லாத்தையும் மறந்து இதுதான் கதி என்று இருக்கவேண்டாம்."

குகன் குறுக்கிட்டு "மோகன் உன் வேலையை முதலில் பாரு, மற்றவர்களுக்குப் புத்தி சொன்னது போதும்".

அதற்குள் இரண்டு வருடங்கள் கடந்தோடின. குகனைத் திருத்தவே முடியவில்லை. மெல்லமாக புகுந்து கொண்ட குடி குகனின் உடல் செல்களையும், உறுப்புக்களையும் அரிக்கத்தொடங்கி விட்டது. ஊரிலே குகனுக்காக ஈடு வைத்து அனுப்பிய வீடு மாண்டு போக இருக்கிறது. ஆனால் குகனின் உடம்போ நோய்க்கிருமிகளைக் குத்தகைக்கு எடுத்து விட்டது.

டாக்டர்கள் எவ்வளவோ அறிவுரை சொல்லியும் குகன் குடியை விடுவதாக இல்லை. ஒருநாள் வீதியோரத்தில் தள்ளாடி நடந்து வந்தபோது ஒரு அழகுச்சிலை நடந்து வருவது அவன் கண்ணின் ஒளியை மங்கச்செய்தது. 'இப்படி ஒரு பெண் என்வாழ்வில் கிடைத்தால் எப்படி இருக்கும் என குகனின் மனம் அலைபாயத் தொடங்கியது.

குகன் வீடு வந்து சேர்ந்ததும் அவள் நினைவே மீண்டும். மீண்டும் வந்தன. அதனால் அவன் அன்று குடிக்கவே இல்லை. உடல்மட்டும் நடுங்கத்தொடங்கிய மோகனுக்கு பயம் எழத்தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குகா, குகா" என மெல்லென அவன் தோள்களை உலுப்பினான். மோகன்.

"நான் இனிமேல் குடிக்கமாட்டன்" என்றபடி மயங்கிப்போனான், குகன்.

மோகன் மருத்துவ வாகனத்திற்கு அறிவித்தல் கொடுத்த சில வினாடிகளில் வந்து குகனைக் கொண்டு சென்றனர்.

மறுநாள் மோகன் மருத்துவமனைக்குப் போவதற்கு ஆயத்தமானான். தொலைபேசி மணி அடித்தது. எதிர் முனையில் டாக்டர் அவசரமாக மருத்துவமனைக்கு வரும்படி மோகனை அழைத்தார்.

டாக்டர் குகனின் மரணம் பற்றி தெரிவித்தார். மோகன் அழத் தொடங்கினான். தேவனுக்கும், குகன் வீட்டுக்கும் செய்தி தெரியப்படுத்தினான். மோகன் "அம்மா உங்கள் கவலை தெரியும். உங்கள் இரண்டு சொத்தில் மீட்க முயற்சி செய்து ஒரு சொத்து பறி போய்விட்டது" என சொல்லி அழத் தொடங்கினான்.

மோகன் தன்னுக்குள் நினைத்தவாறு, 'குகன் திருந்தி வாழ நினைத்தபோது குகனை குடி என்னும் நோய் அவனை அழைத்துச்சென்றுவிட்டது. குகன் மாதிரி இன்னும் எத்தனை இளைஞர்கள் வெளிநாடு வந்து தாயை மறந்து நாட்டை மறந்து அழிந்து போவதை எப்படி நிறுத்துவது' என ஆழ்ந்து யோசனை செய்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்பு

மழைமேகங்களின் இருள் மெல்லென விலகிக்கொள்ள சூரியன் தனது பொற்கரங்களால் நிலமகளை அளந்து பார்க்கின்றான். தாவரங்கள் எல்லாம் முளைவிடுவதற்குரிய அறிகுறிகள் காணப்பட்டன.

அந்த சூரியனின் வெய்யில் மெல்லப்பட ரவி அப்படியே, 'என்ன இன்று சூரியபகவான் கண்ணைத் திறந்து காட்டுகின்றான்' என மேலே அண்ணாந்து பார்த்தான். திருமணம் சொர்க்கத்தில் நிச்சயம் செய்யப்படுகின்றது என்பது அறிஞர்கள் வாக்கு. ஆனால் ரவிக்கோ! திருமணமே அவனுக்கு நரகமாக கசக்கத் தொடங்கியது. அப்படி இருந்தும் அவன் தனது நண்பர்களிடம் தனது குறையைக் காட்டிக் கொள்ளவில்லை. அழகான மனைவியைக் கொடுத்த ஆண்டவன் அழகே இவளுக்கு பலிக்கடாவாக அமைந்தது குறித்து வருந்தினான்.

"ரவி இண்டைக்கு நான் ஒரு க்கா 'சொப்பிங்' போக வேண்டும். அத்துடன் எனது சிநேகிதியையும் பார்த்து விட்டுத்தான் வருவேன். நீரே சமைத்து சாப்பிடும்" என்று மாலதி சொல்லிவிட்டு புறப்பட்டாள்.

ரவியின் மனத்தில் மாலதியை அடித்து நொறுக்க வேண்டும் போல இருந்தது. பின்பு பொலிசு கேசு மானம் மரியாதை போய்விடும் என மௌனமாக தலை ஆட்டி விட்டு இருந்தான்.

ரவி கடையில் உருளைக்கிழங்கு பொரியலை சாப்பிட்டுவிட்டு நள்ளிரவில் சமையல் செய்யாது படுத்துக்கொண்டான். காலையில் போன மாலதி இன்னும் வீடு திரும்பவில்லை. ஒரு தொலைபேசி அழைப்புக்கூட செய்யவில்லை என ரவி நேரத்தைப் பார்த்தான். நள்ளிரவு பன்னிரண்டு மணியாகின்றது. ரவி மனம் கேளாது மாலதியின் சினேகிதி அமலாவுக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, "மாலதி காலையில் உங்களிடம் வருவதாக புறப்பட்டு வந்தாள் இன்னும் வீடு வரவில்லை - அவள் உங்கு வந்தாளா?" என விசாரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமலாவின் ஏளனமான சிரிப்பு ரவிக்கு தொலைபேசியில் கோபத்தைக் கூட்டியது. ஆனால் அமலா சிரித்தபடி "ரவி மாலதி நல்லாக 'பியர்' அடித்து விட்டு படுத்திருக்கிறாள். எழுந்ததும் நான் உங்கள் வீட்டிற்கு அழைத்து வருகிறேன்" என்றாள்.

ரவிக்குக் கோபம் இன்னும் அதிகமாகியது. 'கட்டிய கணவன் நான் ஒருவன் விட்டுக் கொடுத்த இணக்கம் தான் இவள் இந்தக் கூத்து ஆடுகிறாளே நாளை வீட்டுக்கு வரட்டும்' என கோபமாகப் படுக்கை போனான்.

வீட்டின் மணி அடிக்கும் சத்தம் கேட்டு திடுக்கிட்டு விழித்து எழுந்தான் ரவி .

மாலதி "என்ன ரவி எனக்கு பசிக்குது சாப்பாடு தா" எனக்கேட்டாள்.

ரவி நேரத்தைப் பார்த்து விட்டு கேட்ட கேள்வி முடியும் முன் மாலதிக்கு விட்டான் ஒரு அடி கன்னத்தில் பளீர் . என. "என்னடி நினைத்துக் கொண்டு இருக்கிறாய். நான் என்னடி உனக்கு புரிசனா அல்லது கள்ளப்புரிசனா. இரவு இரண்டு மணிக்கு வந்து சாப்பாடு கேக்கிறாய். ஒன்றில் ஒழுங்காக பெண்பிள்ளை மாதிரி இருப்பதென்றால் இரு. அல்லது என் உயிரை எடுக்காது எங்காவது போய்ச் சேரு" என கத்தினான்.

மாலதிக்கு அப்பொழுதுதான் தன் சுய நினைவே வந்தது. வேலை செய்யும் திமிரும் அழகிலும்தான் இவ்வளவு நாளும் என் எண்ணப்படி நடந்து இருக்கின்றேன். ரவியை எதிர்த்து பேசியது குற்றம் என்றபடியால் தானே அடிக்கிறான். நான் செய்தது மிகப்பெரிய தவறு என உணர்ந்தாள்.

"ரவி. நான் இப்ப பொலிசுக்கு போன் செய்து உன்னை உள்ளே தள்ள முடியும். ஆனால் என் புத்தி கெட்டு போனதற்கு நீதான் காரணம். இப்ப அடித்தமாதிரி என்னை ஆரம்பத்திலேயே கட்டுப்படாாக வைத்திருந்தால் நான் இப்படி மோசமாக நடந்திருப்பேனா. என்னை வைத்து உழைக்கவேண்டும் என்று. எண்ணிய நீ இனிமேல் வேலைக்கு போ நான் உனக்கு சமைத்துப் போடுகிறேன்" என்றாள் மாலதி. ரவி மௌனமானான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனக்குப் பிடித்தவள்

மாலைப்பொழுது ஆவதற்கு ஆதவன் தனது கரங்களை சிறிதாக்கிக் கொள்கின்றான். அந்த ஆதவனின் பொன்முகம் இருளில் மூழ்கத் தொடங்கியது.

தமிழ்நாட்டில் பிரபலம் வாய்ந்த நடிகையையும் பாட்டுக்காரர்களையும் காண்பதற்காக காரில் திரள் திரளாக சனக்கூட்டம் வந்து இறங்கிக் கொண்டிருந்தது. குமார் இன்னும் அவனுடன் சேர்ந்த நண்பர்கள், "டே மச்சான் ரூபன் இன்று நாங்கள்தான் முதல் வரிசையில் நுழைவுச்சீட்டு (ரிக்கற்) எடுக்க வேண்டும். 'இல்லையோ மச்சான் நீ செத்தாய்'' - என்று குமார்- ரூபனை மிரட்டுவது போல் கத்தினான்.

"சரி.சரி.'' என ரூபன் சனநெரிசலுக்குள் இடித்துக்கொண்டு நின்றான். நுழைவுச்சீட்டு வாங்குவதற்கு தாமதமாக வந்திருந்த மக்களுக்கு ஏன்டா வந்தோம் என்று இருந்தது.

அதற்குள் ஒரு வாத்தியார், "பகிடியா, சிறிது தூரம் எட்ட நின்று பாருங்கோ தம்பி. தமிழுக்கு விழா என்றால் ஒரு கூட்டத்தையும் காணக்கிடையாது. ஆனால் நடிகைகள், பாட்டுக்காரர் வாறது என்றால் காணும். எங்கடை ஆக்கள் தங்கடை உயிரைக்கொடுத்து என்றாலும் நுழைவுச்சீட்டு எடுப்பினம். அப்படி ஒரு தில்லு எங்கட பொடியளுக்கு'' என சொல்லிக்கொண்டு வாத்தியார் இருக்க.

"அங்க- ஒருக்கா திருப்பிப் பாருங்கோ."

"என்னத்தைப் பாக்கிறது. வெளி நாட்டில் வாழ்கின்ற பொடியளுக்கு நேரத்தை மதிக்க கற்றுகொள்ளத்தெரியவில்லை என்றால் என்ன செய்வது.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“நான் இன்னும் ஒரு மணித்தியாலம் கூடுதலாக வேலை செய்திருக்கலாம் முன்னமே இப்படித் தெரிந்திருந்தால்” என சொல்லியவாறு தனது நண்பன் குரலுக்கு செவி சாய்த்தார்.

“அங்க ஒருக்கா பாருங்கோ வாத்தியார். அதில முன்னுக்கு இடிபட்டுக் கொண்டு நிற்கின்ற பொடியன் எனக்கு தெரிந்த பொடியன்தான். தகப்பன் வாத்தியார். நல்ல நேர்மையான கணக்கு வாத்தியார். ஆனால் கிட்டியில நான் அறிஞ்சனான். இப்ப நாட்டில் அடிக்கடி ஏற்படுகின்ற இடப்பெயர்வால வாத்தியார் சாப்பாட்டுக்கே மிகவும் கரச்சல் படுகுதுகள்”.

“இப்ப அரசாங்கம் ஒழுங்காக சம்பளம் கொடுக்காததில வாத்தியார் இப்ப நல்லாக கஷ்ரப்படுகிறார். தனது குடும்பத்தைக் காப்பாற்ற இப்ப கிட்டியில தான் என்ர மனிசி ஊருக்கு போட்டு வந்தவா சொன்னா”

“கணக்கு வாத்தியார் மகனை நம்பி வாங்கின கடனைக்கூட திருப்பித் தரும்படி கடன்காரர் நெருக்குகினம். ஆனால் வாத்தியார்ரை பிள்ளை இங்கு வந்து இப்படிச் சீரழிந்து போகுது”

“அது சரி வாத்தியார். இவங்களுக்காக தாய் தகப்பன் பட்ட கடனைத் தன்னும் திருப்பி அனுப்பலாம் தானே!” கூறிக்கொண்டே இருவரும் விலகினர்.

குமார் தனது கம்பீரமான குரலில் மற்றவர்களும் கேட்கும்படியாக “இன்று என்னதான் அழிந்தாலும் பரவாயில்லை. என்னுடைய அபிமான நடிகைக்கு என் கழுத்தில இருக்கின்ற ஐந்து பவுண் சங்கிலியை கொடுப்பேன்” என்றான்.

“குமாரின் குடும்பமும் ரூபனின் குடும்பமும் நாட்டுக் கலவரத்தால் சாப்பாட்டுக்கே தினம் கரைச்சல் படுகுதுகள். ஆனால் இவர்கள் தங்கள் உழைப்பையும் திறமைகளையும் வீணடித்துக் கொண்டு இருக்கிறார்கள். ஆத்தை பிச்சை எடுக்குது. பிள்ளை இங்கே நடிகைகளுக்கு பவுண் சங்கிலி போடுகின்றான்” என்று அருகில் நின்றவர் வேதனைப்பட்டார். ரூபன் இடிபட்டுக்கொண்டு நின்றான் நுழைவுச்சீட்டு எடுப்பதற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்த்துடிப்பு

காகக் கூட்டங்களின் கரைதலுக்கு மத்தியில் சின்னச்சின்ன சிட்டுக் குருவிகளும் புறாக்களும் மைனாக்களும் தங்கள் தங்கள் இருப்பிடம் திரும்பிக் கொண்டிருந்தன. அந்த ஆலமரம் தான் எல்லாப் பறைவகளுக்கும் சரணாலயமாக இருந்தது.

கவி தன் தாயுடன் அந்த ஆலமரத்தைப் பார்த்தபடியே, "அம்மா-அம்மா. அந்தப் பறவைகள் எவ்வளவு ஒற்றுமையாக அந்த ஆலமரத்தில் வாழ்கின்றன" என தனது தாய்க்கும் சுட்டிக் காட்டினான்.

தோட்டத்திலிருந்து வரும்பொழுது கவி தன் தாயைக் கேள்வி மேலே கேள்வியாகக் கேட்டுக்கொண்டே வந்தான். "அம்மா- அம்மா- நான் பெரியவனானதும் எங்கள் நாட்டுப் பிரச்சனை தீர நல்ல வழி சொல்லுவேன். அது வரைக்கும் - கொஞ்சம்- பொறு அம்மா- அம்மா- நான் பெரிய படிப்பு படிச்சு அப்பாவின் கடன் எல்லாம் நான் கட்டுவேன்-"

"என்னம்மா அப்பாவும் செய்கிறது- நல்ல மழையில்லை- அடிக்கடி இடப்பெயர்வுகள். இதனால எப்படி அம்மா- ஒரு மனிதன் உழைத்து வாழமுடியும். எப்படியும்- நான் பெரியவனாக வளர்ந்ததும் எங்கள் குடும்பப்பாரம் எல்லாம் போய் விடும். அது வரைக்கும் அம்மா- நீங்கள் அப்பாவை தினமும் பேசக்கூடாது " என்றான் கவி.

கவியின் வார்த்தைகளைக் கேட்ட செல்விக்கு கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடியது.

"கவி- நீ சின்னப்பிள்ளை. இப்பதானே பத்து வயது - உனக்கு - நீ - நினைத்தது போல பெரிய - படிப்புப்படி- இப்ப ஏன் தேவையில்லாம

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்ப பாரத்தை எல்லாம் நினைக்கிறாய்- அப்பு இந்தத் துன்பம் எங்கள் குடும்பத்துக்கே மட்டும் என்று நினைக்கிறாய்- தமிழனாய்ப் பிறந்த அத்தனை குடும்பங்களின் நிலையும் இன்று இதுதான் அப்பு- ஊர் ஓட ஒத்த பிரச்சனை தான் அப்பு".

"அதுக்காக நீ ஒன்றையும் சிந்தியாது- நல்லாக படிக்க வேண்டும்- தமிழினத்திற்கு என்று ஒரு காலம் வெகு விரைவில் வரத்தான் போகுது. அப்ப நாங்கள் தோட்டத்தையும் பெரிய அளவில் செய்வம். கடன் என்ன கடன் தம்பி" என செல்வி தன் மகனைத் தேற்றினாள்.

காலையில் கோயில்மணி ஒலி கேட்கும் போது திடீர் என இராணுவத்தினரின் நகர்வும் ஏற்பட்ட நாய்களின் குலைக்கும் சத்தமும் அந்தக் கிராமத்து மக்கள் எல்லோரையும் எழுப்பியது. எல்லோரும் ஓடுவதற்குத் தயாராக கையில் கொண்டு போகக்கூடிய சாமான்களைத் தேடி எடுத்தனர். மேலிருந்து 'புக்காரா' குண்டைப்போட்டு விட்டுச்சென்றது.

செல்வியின் வீடு தரை மட்டமாகி எரிந்து கொண்டிருந்தது. ஓடும் எல்லோருக்கும் இடையில் செல்வி கவியைத் தேடினாள். கவியைக் காணவில்லை. மீண்டும் வீடு நோக்கி ஓடி வந்தாள். வீட்டிற்குள் கவியின் அங்கங்கள் சிதைந்து கிடந்தன.

"அய்யோ- அய்யோ-" என கூக்குரல் கேட்டு ஓடிய சிலர் திரும்பி வந்தனர். "அய்யோ அப்பு நீ - என்னை விட்டுப் போவதற்காகவா நேற்று - இந்தக் கிழட்டுக்கதை கதைத்தனி- என்ரை - அப்பு இத்தனை கஸ்டத்துக்கையும் உன்னைப் பொத்திப்பொத்தி வளர்த்தது. இந்த துலைவாருக்கு பலிகொடுக்கவே அப்புதம்பி கவி- எழுந்து வாடா- வாடா-" என ஒப்புச் சொல்லி அழுது கொண்டே இருந்தாள், செல்வி. அங்கு ஓடி வந்தவர்கள் கவியின் உடல் உறுப்புக்களை எல்லாம் தேடி ஒன்றாக சேர்த்தனர். ஊர் மக்கள் கண்ணீர் வெள்ளத்தில் சோகமே உருவாக நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேய்பிறை

வானத்தில் கடற்பறவைகள் கோடைகாலத்தை உல்லாசமாகக் கழித்து விட்டு வடக்கு பக்கத்திலிருந்து ஆப்பிரிக்கா பக்கம் நோக்கி வானூர்தியைப் போலவே குரல் எழுப்பியபடி பறக்கலாகின.

மரங்களும் தங்கள் பட்டாடைகளைக் களையத் தொடங்கின பனிமழையில் நீராடுவதற்காக.

கபிலன் மட்டும் வெளியிலே வந்து பறவைகளை அண்ணாந்து பார்த்தபடி நின்றான். அந்த கடற்பறவைகளின் ஒலி அவனுக்கு ஒரு வித ஆறுதலைக் கொடுத்தது. கபிலனுக்கு ஒரு புறம் மனைவியின் தொல்லை. இன்னொரு புறம் பெற்ற தாயின் கடமை. நடக்க முடியாத தாயை எண்ணி கருணை காட்டவும் இந்த வெளிநாட்டு வாழ்க்கையில் அவனுக்கு நேரம் இருக்கவில்லை.

ராதிகா குரல் ஓங்கி ஒலித்தது. "என்ன வேடிக்கை பார்ப்பு? முதலில் வீட்டு வேலைகளைப் பாருங்கள். என்ன ஒரு புதினம் பார்ப்பு அல்லது இந்தக் கிழட்டை முதியோர் இல்லத்தில் விடுவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்யுங்கோ!"

இளமைக்குப் பிரியாவிடை அளித்து விட்டு நடைதளர்ந்து, உடல் தளர்ந்து தள்ளாடி படுத்த படுக்கையில் படுத்திருந்த செல்லம்மாவின் காதில் ராதிகாவின் கடுப்புக்குரல் காற்றில் கலந்து வந்து சுட்டது.

செல்லம்மாவுக்கு இருப்பது சரியோ, பிழையோ தெரியாது தடுமாறினார். ஆதரவு கொடுக்கும் கபிலனுக்கு ஏன்? நான் இன்னும் தொல்லை கொடுப்பான் என நினைத்தார்.

"தம்பி கபில். என்னை நீ முதியோர் இல்லத்தில் சேர்த்து விடு. இல்லை என்றால் தூக்க மாத்திரை தந்து என்னக் கொன்று விடு. எனக்கு உன்னுடைய நிலை விளங்குகின்றது. நான் வாழ்ந்து முடித்தவள். என்னை எல்லா பிள்ளைகளும் கைவிட்டபின் நீதான் எனக்கு உதவி புரிந்தனி. என்னால் உனக்கு ஒரு தொல்லையும் வேண்டாம். நீயும் உன் குடும்பமும் ஒற்றுமையாக இருந்தால் அதுவே எனக்கு சந்தோசம். கவலைப்படாதே கபிலன்" என செல்லம்மா கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கபிலன் வேலைக்குச் சென்றதும் மாமிக்கும் மருமகள் ரதிகாவுக்கும் ஒரே வாக்குவாதம் தான் தினமும் தொடர்கதையாக இருந்தது.

"உன்னாலதான் கிழவி நாங்கள் ஒரு இடமும் போக முடியாது இருக்கின்றது. வேளைக்கு தொலைந்து போவன். நான் உனக்கு பணிவிடை செய்ய என்ன நீ பெத்த பிள்ளையா நான். நீ பெத்த பிள்ளைகளே உன்னை அனாதையாக விட்ட பின் என்னுடைய கருணையால் தான் நீ உயிருடன் இருக்கிறாய்" என கடும் சொற்களால் தாக்கினாள்.

சில நாட்களில் ராதிகாவின் பேச்சால் செல்லம்மாவால் உணவு உட்கொள்ளவே முடியாத அளவுக்கு வேதனை. ராதிகா சாப்பாடு கொண்டு வந்து கொடுத்தாலும் சாப்பாடு குப்பை வழியைத்தான் எட்டிப்பார்க்கும்.

செல்லம்மா ஒரு முடிவுக்கு வந்தாள். என் பிள்ளைகளுக்கு அது பிடிக்கும். இது பிடிக்கும் என என் வயிற்றைக் கட்டி வாயைக்கட்டி வளர்த்த பிள்ளைகள் கடைசிக் காலத்தில் பார்க்கும் என்று நினைத்தது தவறு. இனிமேலும் இந்த அன்னிய நாட்டில் இருந்து வாழ்வதை விட சாவதே மேல் என கடவுளை நினைத்தவாறு தனது மூச்சுப்பையை இறுகப் பிடித்துக்கொண்டு தனது உயிரைத் துறந்தாள் செல்லம்மா.

எல்லாப் பிள்ளைகளும் இறுதிக் கிரிகைக்கு பறந்து வந்தார்கள். "அம்மா, என்னைக் காணாமல் போட்டியிடியே" என ஒப்புச்சொல்லி அழுதனர்.

கபிலன் வீட்டுப் பொம்மை மட்டும் தலை ஆட்டியபடி பிள்ளைகளைப் பார்த்தபடி 'பெற்ற பிள்ளைகள் சரியாக இருந்திருந்தால் இப்படி ஒரு நிலைமை இந்த மனிசிக்கு வருமா?' என கேட்பது போல இருந்தது.

மருமகள் ராதிகாவின் அழுகுரல் மட்டும் எல்லோரையும் கதிகலங்க வைத்தது. இப்படி ஒரு அன்பா மாமியாரில் என செல்லம்மாவின் மரணத்தின் விபரம் நாலு சுவர்களுக்கும், ராதிகாவுக்கும் மட்டும் தான் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர் உலா

மரங்களில் ஓவியர் பல வர்ணங்கள் கொண்டு வரைந்தது போன்று இலைகள் பல பனி கொட்டுவதற்குரியதாக தாங்களைத் தயார் நிலைக்கு மாற்றிக்கொள்ளத் தொடங்கின. இலையுதிர் காலம் யேர்மன் மண்ணில் ஒழுங்காக நடைபெறுவதை சில வேளைகளில் வள்ளுவன் குறள் வழி நடக்கின்றனவோ என்ற சந்தேகம். இயற்கையில் இருந்து - ஆலயம் நிர்வாகங்கள் எல்லாம் ஒழுங்காக காணப்பட்டன.

கலாநிதி - எல்லாவற்றையும் ரசித்தவண்ணம் தனது நண்பன் பாண்டி வீட்டிற்கு வந்தான்.

வீட்டு வாசல் அருகில் சென்றதும் வீட்டுக்குள்ளே இருந்து பாண்டியின் மனைவி ரூபாவின் குரல் நான்கு சுவர்களையும் அதிர வைத்தது.

"உன்னைக் கட்டிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன். ஊரில் இருந்திருந்தால் கஞ்சியோ - கூழோ குடித்துவிட்டு நிம்மதியாக இருந்திருக்கலாம். வெளிநாடு என்று யேர்மனியில் காலடி வைத்ததிலிருந்து நான் வீட்டுக்குள்ளே சிறைப் பறவை போலவே இருக்கின்றேன்.

எங்கும் போக முடியாதபடி என்னை நீயும் வைத்திருக்கிறாய் - அத்துடன் - இந்த அரசாங்கமும் விசா என்ற ஒன்றைக்காட்டி எங்குமே போக முடியாதபடி எங்களை அடிமையிலும் அடிமைகளாக வைத்திருக்கிறார்கள்.

பிள்ளையைக் கண்டித்து வளர்க்க முடியாது. பிள்ளைக்கு அடித்தால் குற்றம். இங்கு எதற்கு எடுத்தாலும்_ ஓட வேண்டித்தான் கிடக்கிறது.

அதற்குள் வேறு நான் வந்த உடனே 'டொச்சைமொழியை' படித்திருந்தால் எல்லா காரியங்களையும் தனியாகவே செய்ய வசதியாக இருந்திருக்கும். அதற்கும் வழியில்லை. என்னை இப்படியே சிறைப்பறவையாக வைத்திருப்பதற்குத்தானா என்னை வெளிநாட்டுக்கு அழைத்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரப்பறவை போல பறந்து திரிந்த காலங்கள் எப்பொழுது மீண்டும் வரப்போகின்றனவோ தெரியாது. என்னை ஊருக்கு அனுப்பு அல்லது நீயும் என்னுடன் ஊருக்கு வா" என ரூபாவின் குரல்கள் இடிமுழக்கம் போல கேட்டது.

தயங்கியபடி கலாநிதி வாசல்மணி அழுத்தியை அழுத்தினார். பாண்டி வீட்டில் திடீரென புயல் ஓய்ந்த மாதிரி இருந்தது.

பாண்டி ஓடிவந்து வாசற்கதவைத் திறந்தார். "என்ன பாண்டி எப்படி சுகம். அடுத்த வாரம் நான் ஊருக்கு போகின்றேன். நீங்கள் ஏதாவது உங்கள் வீட்டிற்குத் தகவல் தந்து அனுப்பலாம்" என்றார்.

ரூபா. தேனீரைக் கொடுத்து விட்டு "கலாநிதி அண்ணை - அடிக்கடி எங்கடை சனங்கள் ஊருக்கு போவதால் தான் எங்கள் ஊரில நாட்டுப் பிரச்சினை இல்லை என்றும், இவர்கள் எல்லாம் இங்கு உழைக்க வந்தவர்கள் என்றும் சொல்லுகினம்.

"அத்துடன் சிங்கள அரசாங்கமும் தமிழருக்கு நாட்டுப்பிரச்சினை இல்லை என்று உலகெலாம் பிரசாரம் செய்கினம். இப்பதான் கலாநிதி அண்ணை எங்கடை மக்களுக்கு பெரிய பிரச்சனை.

"உண்ண ஒழுங்காக உணவில்லை. இருப்பதற்கு ஒழுங்கான வீடு கிடையாது. எங்களுடைய பொருளாதாரம், சொத்து, சொந்த பந்தம் எல்லாத்தையும் அழித்துக் கொண்டு இருக்கிறார்கள். எல்லாத்துக்கும் காரணம் தமிழனாகப் பிறந்ததுதான். இதை உணராமல் எங்கள் தாய் மக்கள் ஊர் உலாத்துக்கு போகிறதிற்கு எங்கள் நாடுதானா இவர்களுக்கு கிடைத்தது.

தமிழனின் காசைக்கொண்டு தமிழனையே அழிக்கிறதுக்கு வழி செய்து கொடுக்கின்றனர்" என ரூபா சொன்னாள்.

இயற்கையை ரசித்தவண்ணம் வந்த கலாநிதிக்கு ஏதோ போல் இருந்தது.

"ரூபா நீர் சொல்வதும் சரிதான். எங்கள் மக்களைக் காப்பாற்ற வேண்டியது எங்கள் கடமை என்பதை நானும் மறந்து விட்டேன். நான் ஊருக்கு போவதைக் கைவிடுகின்றேன்" என கூறிவிட்டு வீடு திரும்பினார் கலாநிதி. தமிழனைத் தமிழன் காப்பாற்ற வேண்டியது ஒவ்வொரு தமிழனின் கடமை என நினைத்தவாறு தனது வீட்டு வாசல் கதவை திறந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அளவுக்கு மீறினால்

அன்பன் தனது காலைக் கடன்களை முடித்து விட்டு தேனீரைப் பருகினான். முன்னர் தான் வட்டிக்கு எடுத்த காசுக்கணக்குகளை ஒவ்வொன்றாக கூட்டிப்பார்த்தார். சில கடன்கள் எடுத்த முதலை விட இரண்டு மடங்கு வட்டி வளர்ந்து இருந்தது. அட உலகில் எல்லாம் வளர்கின்றனதான். இந்த வட்டி வளர்வது போல் உலகில் எதுவுமே வளர்வதில்லை.

எடுப்பது இரண்டாயிரம் சம்பளம். அதற்குள் வீட்டு வாடகை, வாகனம் முதல் தண்ணீர் வரை குடும்பச் செலவுகளைச் சமாளிப்பது என்றால் இந்தக் காலத்தில் பெரியபாடாக இருக்கின்றது. எப்படி வாங்கிய கடன்களைக் கொடுக்கப் போகின்றேனே தெரியாது. என நினைத்தார்.

ஒரு பக்கம் தம்பியைக் கூப்பிட பணம் வேண்டும். அதற்குள் வீட்டுச்செலவுக்கும் பணம் அனுப்பவேண்டும். அதற்குள் வட்டி குட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றது என யுத்தத்தில் இடம் பெயர்ந்த மக்கள் கலங்கியது போல் கலங்கினான் அன்பன்.

"திருமணமாகி மூன்று பாலனை வைத்துக்கொண்டு - உதவி உதவி என்று நீங்கள் எத்தனை நாளைக்குத்தான் இப்படி செய்யப் போகின்றீர்களோ தெரியாது" என புத்திமதி கூறினாள் - மனைவி காந்தம்.

"என்ன காந்தம் நீர் எனக்கு புத்தி சொல்லும் அளவுக்கு வந்து விட்டது நிலமை" என்றான். "வீட்டை வட்டிக்கு எடுத்து என்றாலும் நல்லாக வைத்திருக்கவேண்டும் என எத்தனை தரம் வட்டிக்கு எடுத்து தந்திருப்பன். அதற்குள் காரும் வேண்டும். உம்முடைய ஆசைக்கு அளவே இல்லையா?

"நான் இல்லாக்காலம் இந்தக் கடன்கள் எல்லாம் என் பிள்ளைகள் தலையில்தானே வந்து விழப்போகின்றது. அதற்கு ஏற்றமாதிரி நீயும் சிக்கனமாக நடப்பதாகத் தெரியவில்லை. எப்ப பார்த்தாலும் நவ நாகரிகமாக வருகின்ற அத்தனை வண்ண உடைகளும் எடுக்க வேண்டும் என்றால் என்ன செய்ய முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பெண்கள் சிக்கனமாக இருந்தால்தான் வீடு உருப்படும். அதை விட்டு மூன்று பிள்ளைகளுக்குப் பின்னும் அலங்காரம் என்று திரிந்தால் இந்தப் பிள்ளைகள் கூட கெட்டு குட்டிச்சுவராகப் போய்விடுவார்கள். வருங்காலத்தில் பிள்ளைகளைக்கூட நீர் பார்க்க முடியாத நிலை வந்து விடும்'' என அன்பன் பேசியவாறு இருந்தான்.

அன்பனின் கதை அவள் காதில் சென்றதாகத் தெரியவில்லை.

வாசல் படியில் யாரோ கதவில் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்ததும் வட்டிக்கார கந்தசாமி. அன்பனுக்கு நடுக்கம் எடுத்தது.

வந்ததும் வராததுமாய் "என்ன அன்பன் எத்தனை தரம் தொலைபேசி எடுத்து இருப்பன்! அது சரி எப்பொழுது என் முழுப்பணத்தையும் தரப்போகிறீர்கள். உங்களுக்கு கார் வேண்டும். அழகான வசதியான வீடு வேண்டும். ஆனால் கடன் மட்டும் திருப்பித்தர முடியாதோ'' என்றார் அவர்.

காந்தம், "என்ன கந்தசாமி அண்ணை. நாங்கள் உங்களிடம் வட்டிக்குத் தானே பணம் எடுத்தாங்கள். நீங்கள் என்ன சும்மாவே தந்த நீங்கள். நாங்கள் தருகின்ற நேரம் வேண்டுங்கோ'' என அடாவடித்தனமாக கதைத்தாள்.

கோபம் கொண்ட கந்தசாமி - "அன்பன் - எனக்கு இன்னும் ஒரு மாதத்திற்குள் பணம் திருப்பித் தரவேண்டும்; இல்லை என்றால் அடியாட்களுடன் தான் வருவேன்'' என பயமுறுத்திவிட்டுச் சென்றார்.

அன்பனுக்கு என்ன செய்வது என்று தெரியாது திகைத்தான்.

"காந்தம் எத்தனை தரம் சொல்லி இருப்பன். இந்த வட்டிக்கு எடுக்கிற வேலை வேண்டாம் என்று. ஆனால் நீ கேட்கவில்லை. இப்ப என்ன செய்கிறது. ஆசைக்கு அளவு வேண்டும். வட்டிக்கு பணம் எடுத்தால் இறுதி முடிவு அழிவுதான். உன்னுடைய பேராசையை இத்தோடு விட்டுவிடு'' என்றான் அன்பன் கோபமாக. பணத்திற்கு எங்கு செல்வது என்ற சிந்தனையில் தவித்தான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமுதாய நோய்கள்

திருமணப் பந்தலில் திருமணத்திற்கு வந்திருந்த பெரியவர்களும் குழந்தைகளின் குரல்களும் பல இசைக்கருவிகள் ஒன்றாக வாசித்தால் எப்படி இருக்குமோ அப்படி இருந்தது.

திருமண சுப முகூர்த்தமும் நெருங்கிக் கொண்டு இருந்தது.

வெளிநாட்டுத் திருமணம் ஆகையால் அங்கு வந்திருந்த பெண்மணிகளைச் சொல்லவே தேவையில்லை. ஒரு தங்கச் சங்கலிக்குப் பதிலாக இரண்டு, மூன்று தங்கச் சங்கிலிகள். அட்டியல் ஒட்டியாணம்- அதற்குள்ளும். பெயர்வெட்டிய சங்கிலி என - ஒவ்வொரு பெண்களும் தங்கள்- தங்கள் தங்கநகைகள் தான் தரம் என பொற்கொல்லனையும் மிஞ்சியவாறு நகைகளைத் தரம் பிரித்துப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

மண்டபம் மிகச்சிறிதாக இருந்தபடியால் அங்கு வந்தவர்கள் இருக்கவே இடம் போதாமல் இருந்தது. 'வட்டி' கடுகுமணியின் மகனின் திருமணம் என்றால் கேட்கவா வேண்டும்- கடுகுமணிக்குப் பணத்தைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாது- காசு என்று சொன்னால் சில வேளைகளில் இறந்தாலும் கூட எழுந்திருக்கும் குணம் அவருக்கு.

தமிழன் வாழ்வை அழிப்பதற்கு அறிமுகப்படுத்தப் பட்டதுதான்- வட்டியும் சீட்டும் சீதனமும் போலும்.

தமிழன் வருங்காலங்களையும் எண்ணாது சிலர் பணப்பிசாசு போல அலைவதுதான் தமிழ் இனத்தின் மிகப்பெரிய கொடியநோய். அந்த நோய்க்குள்ளும் கொடிய நோய் சீதனக்கொடுமை.

கடுகமணி சிரித்தபடி திருமணப்பந்தலில் மருமகளை வேளைக்கு கூட்டிக்கொண்டு வருமாறு அழைத்தார். ஆனால் திருமணப்பெண் வந்து கொண்டிருக்கும் பொழுது பேசியபடி . வீட்டு உறுதியையும் மிகுதி இருபதினாயிரத்தையும் வைத்தால் மட்டும் தாலி கழுத்தில் ஏறும் என கடுகுமணி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடுகுமணியின் மகன் தூதனுக்குத் தலை சுற்றியது. தன் தகப்பன் இப்படி கீழ்த்தரமாக தாலி கட்டும் நேரத்தில் நடப்பார் என அவன் எதிர்பார்க்கவில்லை.

திருமணப் பெண்ணின் தகப்பன் சூரி எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கடுகு மணியின் காதில் ஏறுவதாக இல்லை. மதிய நேரம் ஆகியபடியால் அங்கு வந்த விருந்தினர்களுக்கு பசி எடுத்திருந்தது. சின்னப் பிள்ளைகளும் பசியில் வாடினர்.

இப்பொழுது நாட்டுப்பிரச்சனையால் உடனடியாக உறுதி எடுக்க முடியாது என கடுகுமணிக்கு சொல்லியும் அவர் கேட்கவில்லை.

தூதனுக்கு என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தான். தன்னை விருந்தினர் முன்னிலையில் அவமானப்படுத்தின தந்தைக்கு நல்ல பாடம் படிப்பிக்க வேண்டும் என எண்ணினான்.

தூதன், "அப்பா திருமணம் வேண்டாம் வா." என கடுகு மணியை அழைத்துக் கொண்டு சென்று அங்குள்ள மண்டப அறையில் பூட்டி விட்டு வந்து மாமனார் சூரியிடம் மன்னிப்புக் கேட்டான்.

"இன்று திருமணம் நின்றால் பாதிக்கப்படுவது உங்கள் பெண்மட்டும் அல்ல என் குடும்பமும்தான். இந்த நாட்டில் இருவர் உழைத்தால் இமயமலையைக்கூட புரட்ட முடியும். குடும்பம் சந்தோசமாக இருக்க வேண்டும் என்றால் சீதனம், சொத்துக்கள் ஒன்றும் தேவையில்லை. அன்பான மனைவி இருந்தால் போதும். இந்த உலகத்தில் நாம் நினைத்த அனைத்தையும் அடையமுடியும் என இந்த திருமணத்தின் மூலம் நான் நிரூபித்துக் காட்டுகிறேன்" என கூறினான் தூதன்.

திருமணப் பெண்வீட்டாரின் சம்மதத்துடனும் சபையோரின் சம்மதத்துடனும் திருமணம் இனிது நிறைவேறியது. தூதனின் பேச்சு சபையில் வந்து இருந்தவர்களின் உள்ளத்தைத் தைத்தது. சீதனம் என்று அலையும் கடுகுமணிக்கு இப்படி ஒரு பிள்ளையா என திகைத்து நின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேகம்

கடுகதி நெடும் சாலைகள். இரு பக்கங்களிலும் கூட்டம்- கூட்டமாக - வளர்ந்திருந்த அழகான மரங்கள். கதிரவனின் வரவால் கோடைக்காலம் ஆனதால் வீதிகளைப் பார்த்து வாகனங்களைச் செலுத்த முடியாத நிலைமை. இப்படி இருக்க,

அதற்குள்ளும் அடுக்கடுக்காக ஓடிக்கொண்டு இருக்கும் நீண்ட பாரம் ஏற்றும் வண்டிகள். இப்படி சோமுவின் கண்ணுக்கு விருந்தளிப்பதாக இருந்தது.

உலகிலேயே யேர்மனியில் தான் கடுகதி நெடும் சாலைகள் அதிகமாகக் காணப்படுகின்றன என அவன் நண்பன் சொன்ன ஞாபகம் சோமுவின் மனத்தில் நிழலாடியது.

புதிதாக சாரதிப்பத்திரம் எடுத்து விட்டு நண்பர்களையும் ஏற்றிக்கொண்டு மிக- மிக விரைவாக பறந்து கொண்டிருந்தது. சோமுவின் கார் அருகில் இருந்த நிமலன், "சோமு - இந்த கடுகதிப்பாதையில் புதிதாக சாரதிப்பத்திரம் எடுத்து விட்டு இவ்வளவு மின்னல் வேகத்தில் கார் ஓட்டினால் எப்படி இருக்கும். எதற்கும் கொஞ்சம் வேகத்தை குறைத்து ஓட்டு" என புத்திமதி சொன்னான்.

"என்ன நிமலன், உனக்குப் பயமாக இருந்தால் சொல்லு. அடுத்து வரும் வெளியேறியில் உன்னை விடுகின்றேன். நீ 'ரெயின்' எடுத்து வீட்டுக்குப் போ. அட, உனக்கு இவ்வளவு பயமா உன் உயிருக்கு - அல்லது எனது ஓட்டத்தில் உனக்கு நம்பிக்கை இல்லையா?" என கிண்டல் செய்தான் சோமு.

"கிண்டல் இல்லை. எதற்கும் வாழ்க்கையில் மிக- மிக- முக்கியம் வாகனம் ஓட்டுபவர்களுக்கு அவதானமாக இருக்க வேண்டும். அதுதான் நான் சொன்னன். இதை மறந்து நீ இவ்வளவு வேகமாக கார் ஓட்டுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. நீ தனிய இருந்தால் உன் விருப்பப்படி ஓட்டு. ஆனால் இப்படிக் கண்மண் தெரியாமல் ஓட்டாதே'' என்றான் நிமலன்.

அருகில் இருந்த நண்பர்களும் ''இவன் இப்படித்தான் அபசகுனம் மாதிரிக் கதைப்பான். இவனை ஏன் சோமு காரில் ஏற்றிக்கொண்டு வந்தனி'' என்றார்கள்.

''நான் சொல்வது உங்களுக்கு இப்ப விளங்காது. எல்லாம் பட்டால்தான் விளங்கும்'' எனச் சொன்னான் நிமலன்.

நாட்கள் கடந்தோடின - சோமுவின் அதிகவேக ஓட்டமும் - அவதானம் இன்மையும் கடுகதி வீதியில் மிகப்பெரிய விபத்தில் சோமு சிக்கிக் கொண்டான்.

மறுநாள் காலையில் - புதினப் பத்திரிகைகள் எங்கும் இந்த கடுகதிச்சாலையில் நடந்த விபத்து பற்றி செய்திகள் வெளியாகின.

நிமலன் செய்தி கேட்டு - சோமுவைச் சேர்த்த மருத்துவமனைக்கு விரைந்தான். நடைபெற்ற விபத்தில் தவறுதலாக உயிர் தப்பிய சோமு தனது ஒரு கையையும் காலையும் இழந்து முடமாக வேண்டிய நிலைக்கு வந்து விட்டான்.

வாகனம் ஓட்டுபவர்கள் அவதானமும் அவசரமும் நிதான மின்மையினாலும் தான், எங்கள் இளம் பெடியள், இப்படி சோமு மாதிரி பலியாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

வாகனம் ஓட்டுபவர்களுக்கு நிதானமும் அவதானமும் மிக- மிக அவசியம் என்பதனை ஏன் இவர்கள் மறந்தனர்? என்ற கவலையுடன் மருத்துவமனையிலிருந்து வீடு திரும்பினான் நிமலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கை வளம்

சென்னையில் உள்ள ரீ. ரீ. நகரிலிருந்து மதுரை போவதற்கு சொகுசு பேருந்திற்காகக் காத்திருந்தான் உழவன்.

காலை நேரம் ஆகையால் தெருவோரங்களில் துயில் கொள்ளும் இளம் பெண்களும் தாய்மார்களும் பேருந்து போக்குவரத்து திறப்பதற்கு முன் அரைகுறை தூக்கத்துடன் எழுந்து சென்றனர்.

உழவனுக்கு எல்லாம் புதிதாகவே இருந்தது. காரணம் ஏழை மக்கள் எந்த நாட்டில்தான் இல்லை. அதற்காக கால் நடைகள் போல் மனிதர்கள் அதற்குள்ளும் தமிழ்பெண்கள் தெருவோரங்களில் துயில் கொள்வது எந்த அகராதியில் எழுதப்பட்டிருக்கின்றது என்பது புரியாதவனாகத் தடுமாறினான்.

மதுரைக்குப் போகும் பேருந்து கிடைப்பதற்கு இரண்டு மணிகள்தான் இருந்தன.

அதற்குள் உழவன் அங்கும் இங்கும் திரும்பிப் பார்த்தான்.

ஆட்டோக்களிலிருந்து பேருந்து வரைக்கும் மிக நெருக்கமாகவே போய்க்கொண்டிருந்தது. இடையே மாடு ஒன்று குறுக்கிட்டு பல வாகனங்கள் நிறுத்தப்பட்ட ஏனையவர்களின் வயிற்று எரிச்சலை வாங்கிக் கட்டிக் கொண்டது.

நடிகர்களின் படங்கள் தொங்கிய மாதிரிப்படங்களும் காணப்பட்டன. மதுரை செல்லும் பேருந்து வந்து நின்றதும். அதில் அமர்ந்து கொண்டான் உழவன்.

பேருந்து நகரத் தொடங்கியது. உழவன் நகரங்களைப் பார்க்கக் கூடிய மாதிரி பேருந்தின் கண்ணாடி அருகில் இருந்து கொண்டான்.

பேருந்தில் இருந்தவர்கள் பேருந்தின் வேகத்தைக் சிலர் கணக்கிட்டனர். இன்னும் சிலர் தங்கள் வாழ்க்கையில் நடந்த துக்கங்களையும் சந்தோசங்களையும் அருகில் இருந்த நண்பர்களிடம் பகிர்ந்து கொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவன் மட்டும் தமிழ் நாட்டின் இயற்கை அழகை தன் கண்களினால் படம் பிடித்துக்கொண்டிருந்தான்.

பரந்த வெளிகள்- பச்சை பச்சையாகத் தோன்றிய புல்வயல்கள். நெல்வயல்களும் இடையிடையே நன்றிப்பெருக்குடன் நின்ற தென்னைமரங்களில் தேங்காய்கள் குலை குலையாகத் தொங்கிக் கொண்டிருந்தன.

இடையே சிறீரங்கம் ஆலயக்கோபுரம், மலைக்கோட்டை உச்சிப்பிள்ளையார் கோயில், பூச்சோலைகள், நெருக்கமான வீடுகளும், வீதிகளுக்கிடையில் பெரிய சிறிய கட்டிடங்கள் சில இடங்களில் சீமேந்தின் விளம்பரங்கள் வீட்டை அலங்கரித்தும் காணப்பட்டன.

இத்தனைக்குள்ளும் தமிழ் நாட்டின் இயற்கை அழகை எழுதுவதென்றால் பெரிய புத்தகமே இதற்காக வெளியிடலாம். இத்தனை இயற்கை வளங்களைக் கொடுத்த ஆண்டவன், தமிழ்மக்களை வறுமையில் மிதக்க விட்டிருப்பது மிக வேதனையிலும் வேதனையான விடயம்தான்.

தமிழ்மக்கள் ஒற்றுமையாக, இலஞ்ச இலாவணியம் இல்லாமல் ஒன்றாக உழைத்தால், தமிழ்நாட்டிலுள்ள தமிழ் மக்கள் எல்லோரும் சிறப்புடன் வாழலாம் என்பதை தமிழ் மக்கள் ஏன் மறந்தனர் என்பது புரியாத புதிராக இருந்தது உழவனுக்கு.

மேடைக்கு மேடை அரசியலும் சினிமாவும் தாண்டவம் ஆடுவதால் தான் மக்கள் விழிப்புணர்ச்சி இல்லாமல் இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் தமிழ் இனம் முன்னேற வேண்டும் என்றால் கடும் முயற்சியுடன் தமிழனைத் தமிழன் மதிக்கக் கற்றுக் கொண்டால் மட்டுமே தமிழன் முன்னுக்கு வர முடியும். இந்த உலகமே தமிழ் மக்களிடம் மண்டி இட்டுக்கிடக்க நல்ல இயற்கை வளங்கள் இருந்தும் தமிழ்மக்கள் பிச்சை எடுப்பது யாருக்குக் கேவலம் என்பதை தமிழ்மக்கள் ஏன் மறந்தனர் என்று புரியவில்லை.

கால் நடைகளுடன் 'கால்' களாக இன்னும் எத்தனை காலம் வீதிகளிலும் தெருவோரங்களிலும் தமிழ் நாட்டு மக்கள் வாழப்போகின்றனர் - வாழப்போகின்றான் என்ற வேதனையில் உழவன் மதுரை பேருந்து நிலையத்திலிருந்து வீடு நோக்கி நடக்கத் தொடங்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துடிப்பு

"அக்கா, அக்கா- தம்பி பள்ளிக்கூடம் போய்வருவது அவதானம். எதற்கும்- நீ கொண்டு போய் விட்டு வா- அக்கா" என்ற காவிரியின் குரல் அடுப்பங்கரையில் இருந்து புறப்பட்டு வந்தது. அம்மா கண்ணுத்தாய் ஓடிவந்து, "என்னபிள்ளை, உன்னையார் அடுப்படிக்கு வரச் சொன்னது. இந்த நிறைமாதத்தோட ஒரு சாப்பாடு செய்ய வேண்டிக் கிடக்கே-உன்ரை அக்கா செய்வாள் தானே காவிரி! " என்ற கண்ணாத் தாளின் குரல் அயல் வீட்டுத் தவத்தாரின் தூக்கத்தைக் கலைத்தது.

காவிரி மூச்சு வாங்கியபடி மெல்லமாக, "அக்கா- என் மனம் ஏதோ படக்குப்படக்குனு என்றும் இல்லாதமாதிரி அடிக்குது - என் பிள்ளைகளை பள்ளிக்கூடம் பத்திரமாக விட்டு வா-அக்கா" என்றாள் காவிரி.

"பிள்ளை, இந்த நாட்டுப் பிரச்சனையால் நிம்மதியாக ஒரு பிள்ளையைப் பெற்றெடுக்க முடியவில்லை. பிள்ளை வேண்டாம் என்றாலும்- ஆசை யாரைத்தான் விட்டு வைக்கிறது. சின்னஞ் சிறிசுகள் வாழவேண்டும். காவிரி, ஒன்றுக்கும் யோசிக்க வேண்டாம். எங்கடை மருத்துவிச்சி இருக்கும் பொழுது உனக்கு என்ன பயம் பிள்ளை."

"இல்லை- அம்மா எனக்கு ஏதோ முன்னையை விட கொஞ்சம் வித்தியாசமாக இருக்கிறது."

"நீ ஒன்றுக்கும் பயப்பட வேண்டாம். படைத்தவனுக்கு எல்லாம் தெரியும் தானே! போன கிழமை கூட பிள்ளையாருக்கும் முருகனுக்கும் அர்ச்சனை செய்து கொண்டு வந்தனான். நீ கவலைப்படாதே காவேரி" என்றாள் கண்ணாத்தாள்.

அயல் வீட்டில் இருந்து படலை திறக்கும் சத்தம் கேட்டது. "என்ன கண்ணாத்தாள் உன்னுடைய சத்தத்தில் பக்கத்தில் குடி இருக்க கூட முடியலை. அவருக்கு எலாம் மணிக்கூடு தேவையில்லை. உன்கடை குரலும், இந்த வயசிலும் திடமாக உறுதியுடன் வேலை செய்வதும் எங்கள் எல்லோரையும் ஆச்சரியப்பட வைக்குது கண்ணாத்தாள்"என நடந்தபடியே வந்தாள் தங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கம் வந்து - ஒரு சில வார்த்தைகள் கதைக்க முன்பு காவிரி "வாங்கோ- அக்கா" என்றாள்.

"எப்படிப்பிள்ளை இப்ப இருக்கு. இண்டைக்கோ- நாளைக்கோ- என்று இருக்கிறாய். இனி மிக அவதானமாக இருக்க வேண்டும்" என்றாள், தங்கம்.

அடுப்படிக்குப் போன காவேரி "ஐயோ! அம்மா! " என்று கத்தத் தொடங்கினாள்- "அம்மா -வலிதாங்க முடியாமல் இருக்கம்மா" என கத்திக் கொண்டிருந்தாள்.

தங்கமும், "மருத்துவிச்சியை ஓடிப்போய் கூட்டிக்கொண்டு வாங்கோ" என்றதும் அந்த ஐம்பது வயதிலும் தங்கத்திற்கு எப்படி அந்த வேகம் வந்ததே தெரியாது உடனே ஓட்டமும் நடையுமாக மருத்துவச்சியைக் கூட்டிக்கொண்டு வந்தார்.

மருத்துவிச்சி -காவேரிக்கு இன்னும் கொஞ்ச நேரத்தில் பிள்ளை பிறந்துவிடும் என ஆறுதல் வார்த்தை கூறினார். சில மணி முயன்ற பின்பும் காவேரியைக் காப்பாற்ற முடியவில்லை. "உடனே, பெரியாஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லுங்கோ" என்ற மருத்துவிச்சியின் வார்த்தையில் உடனடியாக பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு விரைந்தனர், காவேரியை-

டாக்டர்களும் காப்பாற்றப் படாதபாடு பட்டனர். போதிய மருந்து வகைகள் இல்லாத படியால் சத்திர சிகிச்சை செய்து குழந்தையையும் தாயையும் அவர்களால் காப்பாற்ற முடியாது போய்விட்டது.

டாக்டர் "அம்மா காவேரியைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது" என்றார். கண்ணுத்தாய், "அப்ப குழந்தை ஐயா?" என்றாள்.

"இருவரையுமே காப்பாற்ற முடியவில்லை" என்றார் டாக்டர்.

ஐயோ என்ற குரலுடன் கண்ணாத்தாள் மயங்கி விழுந்தாள். அருகில் நின்ற தங்கம், "இந்த நாட்டுப்பிரச்சனை என்ற பெயரில் திட்டமிடப்பட்ட மருந்துதடையால் இப்படி எத்தனை காவேரிகளின் உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றது.

இப்போது காவேரியின் ஞபாகச்சின்னமாக இருப்பது ஐந்து வயது மகன் பாபுதான் - தாய் அற்ற அனாதையாக இன்னும் எத்தனை பாலன்கள் இருக்கிறார்கள். " தூரத்தில் தாயைத்தேடி கன்று கத்துவது தங்கத்தின் மனத்தில் இருந்த வேதனையை இன்னும் கூட்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு

இயற்கை அன்னை ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதோ ஒரு விதத்தில் குறையை வைத்திருக்கிறாள், என - வானொலியில் இருந்து வந்த குரல் மணவாளனின் மனதைத் தொட்டு விட்டன.

மணவாளன் தனது இடது காலை மெல்லென தொட்டுப்பார்த்தான். கம்பீரமாக நடந்து திரிய வேண்டிய கால்கள் இன்று பலமிழந்து இருக்கின்றன. என்னை இனிமேல் யார் திருமணம் செய்து கொள்ளப் போகிறார்கள்? எல்லாம் என் தலையெழுத்து என்று நம்பிக்கை இழந்து காணப்பட்டான்.

ஒரு புரட்சியான பெண். மேலும் அவள் படிப்பில் மிக கெட்டிக்காரி. எல்லாப் பட்டங்களையும் தன் பெயருக்கு மேல் அடுக்கி வைத்திருந்தாள். படிப்பதிலே அதிக கவனமாக இருந்ததனால் அவள் திருமண வாழ்க்கையை நினைத்துப் பார்க்க முடியாமல் போய்விட்டது. தலையில் மல்லிகைப்பூ சூடும் நிறத்தில் அவள் கூந்தல் இருந்தது. பெண்கள் எப்பொழுதும் இருபதிற்குள் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என பெரியவர்கள் சொல்வார்கள்.

'நான் தான் படிப்பில் அதிக கவனம் செலுத்தியதால் வாழ்க்கையை கோட்டை விட்டு விட்டேன்' என வேதவல்லி மனம் வருந்தினாள்.

"வேதவல்லி" என அழைத்தவாறு அம்மா தங்கம்மா வந்தாள்.

"அந்தநேரமே என் சொல்லக் கேட்காமல் நல்லாக படிச்சாய் பிள்ளை. இப்ப உனக்கு உன் படிப்புக்கு மேலால் ஒரு மாப்பிள்ளையை பார்ப்பது பெரியபாடாக இருக்கிறது. உன்னுடைய அறிவுக்கு முன்னால் மற்றவர்கள் எவருமே நிற்க முடியாது. ஆனால், யார் செய்த பாவமோ தெரியாது. உனது திருமணம் இப்படியே இழுபட்டுக் கொண்டு போகின்றது. எல்லாம் அந்த ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்."

"அம்மா, எல்லோரும் நான் படித்த படிப்பையும் பார்க்காது, என் சம்பளமும், என்னுடைய சொத்தையும் தான் குறி வைத்து வருகினம். அதற்கு நாங்கள் என்ன ஏமாந்த பெயர் வழியா அம்மா" என வேதவல்லி கூறினாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் கடந்தோடின. தங்கம்மாவும் இயற்கை எய்தினாள். வேதவல்லிக்குத் துணையாக இருந்த அம்மாவும் மறைந்து போனது வேதவல்லிக்கு இந்த உலகமே அழிந்த மாதிரி தோற்றம் உருப்பெற்றது.

'என்ன உலகமடா? படித்த - இவளைக் கட்டினால் எங்களை அடக்கி ஆளுவாள் அகங்காரக்காரி என்ற பயம். பணக்காரி என்ற இறுமாப்பு என்று ஊர்சனம் வசைமொழி பேசியதைக் கேட்டிருக்கின்றேன். குறை சொல்வதிலேயே தமிழ் மக்கள் தங்களைத் தாங்கள் அழித்துக் கொள்கின்றனர். வறுமைப்பட்டால் ஏழை என்று ஒதுக்கி வைக்கின்றனர். இந்த பைத்தியக்கார உலகத்தில் எப்படித்தான் வாழ்வது' என்று புலம்பிக் கொண்டு இருந்தாள்.

இப்படி இருக்கும் போது-

மர நிழலின் நடுவே மூன்று காலுடன் ஒருவன்- பாடிக்கொண்டு போவது வேதவல்லியின் கண்ணில் பட்டது.

அட இந்த- ஒரு கால் ஊனமான நிலையிலும் சந்தோசமாக பாட்டுப்பாடிக்கொண்டு போகின்றது. வேறு யாருமில்லை, அவள் மணவாளன் தான். அவள் கண்ணுக்கு புரட்சி வீரனாக தென்பட்டான். 'உலகம் என்ன நினைத்தால் என்ன - ஊர் என்ன நினைத்தால் என்ன- நான் படித்த படிப்பு மனிதன் பண்படத்தானே பயன் பெற வேண்டும்! இந்த சமுதாயத்திற்கு நான் ஒரு வழிகாட்டியாக அமையவேண்டும்' என நினைத்தாள்.

எல்லோரும் பயந்து ஒதுக்கிய வேதவல்லி மணவாளனின் வீட்டிற்குச் சென்றாள். தனது விருப்பத்தைத் தெரிவித்தாள். "நீ தாய் இல்லாப் பெண்ணு. இந்த நொண்டிப்பயலைக்கட்டி என்ன சுகத்தை அனுபவிக்கப் போகிறாய்! நீ நல்ல இடமாகப் பார்த்து திருமணம் செய்து கொள்! " என வேதவல்லிக்கு மணவாளன் பெற்றோர் அறிவுரை கூறினர்.

வேதவல்லி "'செக்ஸ்' மட்டும் தான் மனித வாழ்க்கையில் முக்கியமல்ல. மனிதர்களின் உணர்வுகளை - அபிலாசைகளைப் புரிந்து கொண்டு ஒருத்தருக்கு ஒருத்தர் துணையாக வாழ்வதும் ஒரு வாழ்க்கைதான். இந்த உலகில் ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருக்க வேண்டியது மனிதப்பண்பாடு" என கூறி மணவாளனைக் கைப்பிடிக்க முடிவெடுத்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தணியாத தாகம்

தத்துப்பிள்ளையான அமுதா காலையில் வாசல் கதவைத் திறக்கும் போது தனது கைத்தடியுடன் அங்கே நின்று கொண்டிருந்த கோமதியம்மா, "என்ன பிள்ளை, இன்று என்ரை பிள்ளைகளின் கடிதம் வந்ததோ" என்றார்.

"இன்று கடிதம் வரைவில்லை" என பதிலளித்தாள் அமுதா. "அம்மா அப்ப முன்பு போட்ட கடிதத்தை வாசித்துக் காட்டவா" எனக் கேட்டாள்.

தனியாக இருக்கும் கோமதி அம்மாவின் ஐந்து பிள்ளைகளும் வெளிநாட்டில் என்ற படியால் தான் அமுதாவைத் தத்து எடுத்து வளர்த்தார்.

அமுதா அறைக்குள் சென்று பழைய கடிதத்துடன் வந்தாள். "சரி பிள்ளை அப்ப படிச்சுக்காட்டு" என்றார்.

"யேர்மனி அன்புள்ள அம்மாவுக்கு, நான் நலம். அது போல் நீங்களும் சுகமாக இருக்க எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவானாக!

மேலும் நான் அனுப்பிய பணம் கிடைத்திருக்கும் என நம்புகிறேன். அடுத்த தவணைக்கு கனடிய அண்ணாவிடம் பணத்தை எழுதி வாங்கவும்.

உடலை நன்றாக பார்த்துக் கொள்ளுங்கோ. செல்லடிகள் அவதானம் அதற்கு ஏற்றாப்போல எவ்வளவு செலவு என்றாலும் பரவாயில்லை. 'பங்கர்' வெட்டி அவதானமாக இருங்கோ. மடல் மீண்டும் தொடரும்.

இப்படிக்கு கடைசி செல்லக்குட்டி

சேரன் (6-4-99)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“பார்த்தியே பிள்ளை அமுதா. என்ரை பிள்ளைகளை! அந்த நேரம் என்ன மாதிரி வளர்த்தனான். எங்கள் கண்ணுக்கு முன்னால் இருக்க வேண்டும் என எவ்வளவு கற்பனை கட்டி இருப்பேன். அந்த ஆசைகள் எல்லாம் நிராசையாக போய்விட்டது இன்று. எனக்கு கொள்ளி போட என்றாலும் அவன் வரவேண்டும். என் பிள்ளை” சேரன் கொள்ளிபோட்டால்தான் என்ரை கட்டை வேகும் பிள்ளை

கோமதி அம்மாவுக்கு வயது அறுபத்தி ஐந்து இருக்கும்

திடீர் என மலேரியா நோய் தொற்றிக்கொண்டது. கோமதி அம்மாவுக்கு காச்சல் அதிகமாகிக் கொண்டு இருந்தது.

“அமுதா அமுதா! நான் பிழைக்க மாட்டேன் போல கிடக்குது. எதற்கும் ஒருக்கா என்ரை கடைசிக்கு போன் பண்ணு பிள்ளை” என்றார் தளுதளுத்த குரலில், கோமதி அம்மா.

அமுதாவும் தொலைபேசி இணையகம் ஊடாக யேர்மனிக்கு தொடர்பு கொண்டாள். “அம்மா மிக மோசமான நிலையில் இருக்கிறா. சேரண்ணா, உங்களை உடனடியாக வரவும் என சொன்னார் அம்மா” என்றாள் அமுதா.

“சரி சரி முயற்சி செய்கின்றேன் என்று அம்மாவுக்கு சொல்லும்” என கூறிவிட்டு அழத் தொடங்கினான் சேரன்.

சேரன் தாய்நாட்டுக்குப் போவதற்குரிய விசா ஏதும் இல்லாது இருந்தான்.

காய்ச்சல் முற்றிய நிலையில் கோமதி அம்மா இறக்கும் தறுவாயில் இருந்தார்.

உறவுகள் எல்லாம் வந்து இறுதியாக ஒருவர் தேவாரம் பாட மண்ணில் இருந்து பொன் வரைக்கும் கரைத்து பருகக் கொடுத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோமதி அம்மாவின் கண்கள் மகன் இறுதியில் கொள்ளி போட வருவான் என்ற நம்பிக்கையில் சேடம் இழுத்தவண்ணம் வாசல் படியையே பார்த்தவாறு இருந்தார்.

அமுதா மெல்லென எழுந்து சேரனின் நிழல் படத்தைக் காட்டியதும் ஏதோ சொல்ல வாய் வருகின்றது. முடியாமல் கண்ணீர் விட்டபடி வாசல் கதவையே பார்த்தபடி உயிர் விட்டார்.

தாய்க்குக் கொள்ளிபோட முடியாமல் வெளிநாட்டில் பிள்ளை தவிக்க மகன் இறுதி நேரத்தில் வருவான் என்ற நப்பாசையில் இறந்த கோமதி அம்மாவின் ஆசைக் கனவு நிறைவேறாது நிராசையாகப் போனது.

அமுதா அழுதவண்ணம் கோமதி அம்மா அருகில் தனது நிலை இனி என்ன என்ற கேள்வியுடன் ஏங்கிக்கொண்டிருந்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைக்குரல்

அதிகாலையில் முருகன் கோயில் மணி ஒலித்தது. விடுமுறைக்காக வந்திருந்த சிவத்தின் காதில் காலையில் கேட்ட கோயில் மணிஓசைகள்– காகம் கரையவும், கோழி கூவவும், எல்லாம் மிகவும் புதிதாக இருந்தது. இந்த சங்கீதங்களை எல்லாம் தமிழ் ஈழத்தில் கேட்ட நினைவு அவனுக்கு.

சிவத்தின் தாயார் எழுந்து– "தம்பிதலைமுடி வெட்டப் போற என்டனிட காலை ஒன்பது மணிக்கெல்லாம் கடை திறந்திருக்கும். பக்கத்து வீட்டு கண்ணனையும் துணைக்கு கூட்டிக்கொண்டு போய் வா–" என்று சொல்லிவிட்டு சிவத்தின் தாயார் காலைச்சாப்பாடு தயார் செய்யத் தொடங்கினார்.

சிவனும்– கண்ணனும்– சிகை அலங்காரக் கடைக்குச் சென்றனர். அங்கே! இன்னும் மூவர் அதிகமாக இருந்ததால் அருகில் உள்ள கதிரையில் சிவம் அமர்ந்து கொண்டான். கண்ணன் சில நிமிடத்தில் வருவதாக கூறிவிட்டுச் சென்றான்.

சிகை அலங்கார முதலாளி வேணு, "எப்படி அண்ணை வெளிநாட்டுப் பயணம்? எல்லாம் நல்ல இருக்குதா? எங்கடை நாட்டைப்பற்றி என்ன நினைக்கிறீங்கள்?" என்று வேலை செய்து கொண்டு கேள்வி கேட்டார்.

"எல்லாம் ஆண்டவன் புண்ணியத்தில் நல்ல நடக்குது. எப்படியும் இன்னும் இருநாட்களில் மீண்டும் பிரான்சுக்கு போய்விடுவேன்" எனச் சொன்னார் சிவம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருகில் சிகை அலங்காரம் செய்யும் இன்னொரு தம்பியும் "ரேயின்" ஒண்ணில் இந்திப்பாட்டை நன்றாக கூட்டிவிட்டு விட்டு நல்ல ரசனையில் சிகை அலங்காரம் செய்து கொண்டு நின்றார்.

சிவம் மெல்லமாக "தம்பி வேணு, காலையில தமிழ்ப்பாட்டு போகாதா- தமிழ் பாட்டு இங்கு கேட்க வேண்டும் போல இருக்கு"- என்றான்.

வேணு தனது தொழிலாளியைப் பார்த்து "எல்லோருக்கும் தமிழ் பாட்டு கேட்க வேண்டும் போல கிடக்குது/ நீ என்ன இந்திகாரனா? தமிழ்பாட்டை கொஞ்சம் போடப்பா" என்றார்.

இன்னும் ஒரு அம்மா தனது வயது குறைந்த பையனைக் கூட்டிக்கொண்டு வந்து, "வேணு, உடனே என்புள்ளைக்கு முடி வெட்ட முடியுமா?" எனக்கேட்டார்.

"உன்பிள்ளையை இருத்திவிட்டு போ. நான் இன்னும் இருவருக்கு முடி வெட்டிவிட்டு உன் பிள்ளைக்கு வடிவாக முடி வெட்டிவிட்டு சொல்லி அனுப்புகிறேன். வந்து கூட்டிக்கொண்டு போ" என சொல்லி அனுப்பினார் வேணு–

மறுபக்கத்தில் சிகை அலங்காரம் செய்யும் தம்பி முதலாளி வேணு சொன்னதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. மேலும் சிறிதாக இந்திப் பாட்டைக் கூட்டினார்.

வேணுவுக்கும் அங்கு வந்திருந்தவர்களுக்கும் கொஞ்சம் மனதிற்குச் சங்கடமாக இருந்தது. சிறிது நேரத்தில் வேணு ரேப் பெட்டியை நிறுத்தி விட்டார். "டே தம்பி நான் எத்தனை முறை சொல்லி இருக்கிறன் தமிழ்பாட்டு போடச்சொல்லி. நீ என்னடா இந்திக்காரனுக்கு பிறந்தவன் மாதிரி இந்திப்பாட்டு கேட்கிறாய்" என்றார் வேணு. "நீ கஷ்ரப்படுகிறாய் என்றுதான் வேலைக்கு சேர்த்தனான். நீ என்னடா என்றால் யாரையும் மதியாமல் உன்பாடில இந்திப்பாட்டு கேக்கிறாய் – இது தொழில் செய்யிற இடம். இங்கு கஷ்ரமர் விருப்பத்திற்கு தான் நாங்க நடக்கவேண்டும். நீ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன் விருப்பத்திற்கு வீட்டில இந்திப்பாட்டை கேள்'' என இருவருக்கும் வாய்ப்பேச்சு முற்றியது.

சிவம் இடையில் குறுக்கிட்டு ''வேணு, சின்னப்பிள்ளை தெரியாமல் செய்த பிழைகளை மன்னிச்சு வேலையில சேர்த்துக்குங்க'' என்றான்.

''இல்லை அண்ணை_ இவன் ஆத்தா எவ்வளவு கஷ்ரப்பட்டு என்னிடம் கொண்டுவந்து சேர்த்திடுச்சு. கொஞ்சம் வேலை தெரிந்ததும் இப்ப என்னை ஒரு முதலாளியாக மதிக்கிறானா பாருங்கே!''

''சரி_ சரி_ வேணு_ இது எல்லாம் என்னால் தானே வந்த வினை _ தமிழ் பாட்டு கேட்க போய் நீங்கள் இருவரும் ஏன் சண்டைபிடிக்கிறீர்கள்_?''

கொஞ்சம் அனுசரிச்சு போகச் சொல்லி வேணுவுக்கு அதிகமாகக் காசு கொடுத்துவிட்டு தமிழ் பாட்டு ''ரேப்பில்'' போடகேட்டபடி வெளியேறினான் சிவம்_

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரப் போர்

வீட்டில் பொருட்கள் எல்லாம் போட்ட போட்ட இடத்திலேயே காணப்பட்டன. மோகினி பொருட்களை எடுத்துக்கொண்டு "இந்த மனிசனுக்கு எப்படிச் சொன்னாலும் கேட்டபாடு இல்லை. நெடுகலும் நான் தான் வீட்டில எல்லா வேலைகளையும் பார்க்க வேண்டுமே. இவர் மட்டும் கால் நீட்டி நிமிர்ந்து நித்திரை கொண்டால் போதும்" என புலம்பினாள் மோகினி.

"என்னடி— என்ன – சத்தம் – உனக்கு வர- வர- வாய் கூடிக் கொண்டுதான் போகுது. அப்ப உனக்கு ஒரு வேலைக்காரியை பிடிச்சுத்தரவே – பெண்கள் என்றால் வீட்டைத் துப்பரவு செய்து வைத்திருக்காமல், பின்னை என்ன குப்பையாகவே வீட்டை வைத்திருக்கப் போகின்றாய்?" என கணவன் குரல் உயர்ந்தது.

மோகினி "இந்த மனிசனைக் கட்டினதிலிருந்து நான் எந்த சுகத்தையும் அனுபவிக்கவில்லை. என்ர தாய் தகப்பன் செய்த வேலையால இந்த வெளிநாட்டிக்கு வந்து கஷ்ரப்பட வேண்டிக்கிகிடக்கு!"

"என்னடி – உனக்கு இப்ப என்ன வந்திட்டுது – "செல்லடி பட்டவள் மாதிரி கத்திக்கொண்டு இருக்கிறாய்?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“ஓ! செல்லடிக்குள்ள வாழலாம் ஆனால் இந்த நாட்டில வாழவே முடியாது. மற்றவங்களைப் பாருங்கே! எல்லா நாட்டுக்கும் போய்வருகுதுகள். என்ன எல்லாம் செய்யுதுகள்! இவர் மட்டும் தான் இங்கு பெரிய உழைப்பு உழைக்கிறராம்.”

“அது சரி! அதற்கு இப்ப என்னை என்ன களவு எடுத்துக்கொண்டு வரச்சொல்லுறியே! நான் எடுக்கிற சம்பளம் காணும் குடும்பம் நடத்த. அதைவிட்டுட்டு வட்டிக்கு எடுத்து வாழப்பழகினால் மனிசன் நிம்மதியாக வாழ முடியுமே! உனக்கு ஆடம்பரமாகத்தான் வாழ வேண்டும் என்று நினைத்தால் நீ எங்கை என்றாலும் சுகந்திரமாக போய் வாழு. முன்பு நீங்கள் வாழ்ந்த நிலைமைகளைக் கொஞ்சம் யோசிச்சுப் பார்க்க வேண்டும். எங்கள் நாட்டில அன்னையின் மகனும். மகளும் விடுதலைப் போராட்டத்தில் இணைந்து போராடி மாவீரராகி விட்டுதுகள். எங்கள் இனத்தின் விடுதலைக்காக இன்னும் எத்தனை பிள்ளைகள் பேராடுதுகள் என்று உனக்குத் தெரியுமே. ஆடம்பரமாக வாழ்ந்த எத்தனை இலட்சம் தமிழ் மக்கள் இன்றைக்கு வீதியில நிற்கினமென்று உனக்குத் தெரியுமே! இதுகளை எல்லாம் மறந்து உங்களுக்கு இங்கு ஆடம்பரம் கேக்குதோ!

“இன்னும் சொல்லப்போனால் திட்டமிட்டு மருந்தாலும்– உணவுத் தடையாலும் தமிழனைக் கொல்லுகிறாங்கள். இங்கு என்னடா என்றால் ஊர் – உலாவரக் கார் கேக்குது– நல்ல வேடிக்கைதான்.”

மோகினி அறைக்குள் நின்று கொண்டு “உங்களுக்கு வாழத் தெரியாததற்கு ஏன் நாட்டை இழுக்கிறீங்கள்– எப்படி வாழ்ந்தாலும் ஊரோடு ஒத்து ஓடவேண் டும்! இவருக்குத்தானாம் பெரிசா நாட்டுப்பற்று இருக்குது.”

“நாடு கிடந்தால் எனக்கென்ன முதலில் நாங்கள் வசதியாக வாழுவம். பின்பு நாட்டுக்கு போற நேரம் அதைப்பற்றி சிந்திப்பம்.”

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“அது சரிதானடி – மோகினி “கொப்பன்” உனக்கு நல்ல பெயர் வைச்சுவிட்டான் மோகினி என்று. நீ என்ன என்றால் வீட்டில மோகினிப்பிசாசு விளையாட்டுக் காட்டுகிறாய்.

“இன்று தமிழினம் அல்லல் படுவதுக்கு என்ன காரணம் தெரியுமே! உன்னைப்போல பிசாசு பிடித்த சனம்தான் காரணம். தனிய சாப்பாடும், படுக்கையும் வாழ்க்கையாகி விடாது. தமிழினம் என்ற உணர்வு வரவேண்டும். அப்பதான் நமது இனம் விடுதலை அடையும். தமிழன் வீட்டிலேகூட ஆயுதம் ஏந்தி போராட வேண்டிகிடக்குது. வீட்டிலே ஒற்றுமையைத் தேடவேண்டி கிடக்கு? எப்படி தமிழ்மக்கள் உருப்படுகின்றது?”

கணவனின் சொற்களைக் கேட்டவாறு “இப்ப சொன்னதை எல்லாத் தமிழரும் நினைத்தால் எப்பவோ தமிழ்மக்கள் நிம்மதியாக வாழ்ந்திருப்பினம்; எல்லாத் தமிழரும் கஞ்சி குடித்தென்றாலும் நிம்மதியாக நாட்டில் வாழ்ந்திருக்கலாம்” என்றாள் மோகினி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவதை

மாலன் கட்டிலில் படுத்தபடியே இருமும் சத்தம் அருகில் உள்ள நோயாளியின் தூக்கத்தைக் கலைத்தது. அருகில் இருக்கும் பீற்றர் "என்ன உமக்கு கடுமையாக இருமினால் டாக்டரைக் கூப்பிடட்டுமா?" என்று கேட்டார். கையசைவில் ஒன்றும் இல்லை என்று கூறிவிட்டு மீண்டும் இருமினான் மாலன்.

சிறிது நேரத்தில் தனது கடந்த கால நினைவுகளுக்குள் மூழ்கிப் போனான்.

"எப்பொழுதும் சுறு சுறுப்பும் அழகான திடகாத்திரமான உருவம் கொண்ட நான் – ஏன் இன்று இப்படி இந்த இழி நிலைக்கு வர வேண்டும். எனக்கு பெற்றோர்கள் வெளிநாட்டில் இருந்திருந்தால் எப்படியும் என்னைக் கண்டித்து வளர்த்திருப்பர். என்னைக் கட்டுப்படுத்த நல்ல நண்பர்களோ துணையோ இல்லதபடியால் தானே இந்த நிலை – என் நிலையில் இருந்த காவாணன் எப்படியோ ஒரு தமிழ்பெண்ணை ஏமாற்றி திருமணம் செய்து கொண்டு வாழ்கின்றான். எப்படியும் அவன் அந்த ஒன்றும் அறியாத அப்பாவிப் பெண்ணைக் கொஞ்சம் கொஞ்சமாக கொன்று கொண்டு இருக்கிறான்.

ஆனால் – என்னால் நடக்க முடியும். என்னால் அந்தப் பரிதாபமான பெண்ணிடம் நிலையை விளக்கி இருப்பேன்– என்ன செய்வது– ஆண்டவன் தந்த பரிசுத்த உடலை நான் என்ன எல்லாம் கேவலமான வேலைகளில் ஈடுபடுத்தினேன்" என நினைவலைகளில் மூழ்கினான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலனின் மனச்சாட்சி பேசியது. 'இப்பொழுதுதான் தம்பிக்கு - ஞானம் பிறந்து இருக்கின்றது போலிருக்கின்றது. இனி உனக்கு ஞானம் வந்து யாருக்கு என்ன புண்ணியம்- ஆண்டவன் கொடுத்த அழகான உடம்பை இப்படியா அழித்துக் குட்டிச்சுவராக்குவது- மகனே! ஒரு மாலன் மட்டும் திருந்தினால் போதுமா? உன்னைப் போல எத்தனை மாலன்கள் விபச்சார விடுதிகளில் அலைகின்றனர்- அவர்களுக்கு இந்த எயிட்ஸ் நோயின் கொடுமை தெரியவில்லை போலும். காசை தண்ணியாக செலவு செய்து எத்தனை பெண்களின் சந்தோசத்தை அழித்திருப்பாய். எத்தனை மாடிப்படிகளில் கால் கடுக்க- அந்த எழில் ராணிகள் பின்னால் நாய் மாதிரி அலைந்து இருப்பாய்? கட்டுப்பாடு இல்லாதபடியால் அன்று அருணகிரி நாதர் போல - இன்று ஆடி- அடங்கி வருந்துகிறாய்.'

இந்தக் கொடு நோய் உலகில் யாருக்கும் வரக்கூடாது. பயமுறுத்தியபடி இருந்தது. மாலனின் உருக்குலைந்த உடல்களில் சதைகளுக்கும் எலும்புகளுக்கும் பெரிய சண்டையே நடந்து கொண்டு இருக்கின்றது. எலும்பு எப்படியோ வென்று விட்டது. மாலன் தன் உண்மையான உருவத்தைக் கற்பனையில் நினைத்தாலே இன்றும் அவனுக்கு ஆசையாக இருக்கும். மரணவாசலில் கோலங்கள் போட்டு மாலனை அழைப்பதற்காக காவலாளர்கள் காத்துக் கொண்டு நிற்கின்றனர் போல் தோன்றியது.

மாலன் திருந்தியவனாக - 'ஆண்டவனே! எனக்கு இன்னொரு பிறவி கொடு. நான் செய்த பாவத்திற்கு புண்ணியம் தேட வேண்டும். அதுவும் நல்ல புத்தியாகக் கொடு. அடுத்த ஒரு பிறப்பிலாவது. இந்தப் பெண்களின் பின் அலைவதை எனக்குத் தந்து விடாதே ஆண்டவா!

யார் என்றாலும் இந்த கொடிய நோய் எயிட்ஸ் மருந்து கண்டு பிடித்தால் என்னைப் போல எத்தனை வாலிபர்கள் மரணத்தின் விளிம்பிலிருந்து காப்பாற்றப்படுவார்கள்.' என நினைத்தவாறு சாய்ந்து படுத்துக்கொண்டான்.

அருகில் இருந்த பீற்றர் "மாலன் -மாலன்" என குரல் கொடுத்தார். மாலனை எயிட்ஸ் தேவதை அழைத்துக் கொண்டு சென்றுவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயகம்

வீட்டுக்கு அருகில் கடுகதி வேகத்தில் கார் விரைந்து சென்றது. ஆனால் ஈழவன் மட்டும் நிம்மதியாக தூங்கிக்கொள்ள முடியாமல் தவித்துக் கொண்டிருந்தான்.

ஊரில் இருந்த ஈழவனின் சொத்துக்களை எல்லாம் வெளிநாட்டுப் பயணத்திற்காக விற்றுவிட்டான். மிகுதி ஊர் நண்பர்களிடம் கடன்பட்டு வெளிநாடு வந்து அரசியல் தஞ்சம் புகுந்தான் யேர்மனியில்.

ஈழவனின் பிள்ளைகள் இங்கு பிறந்து இருந்தாலும் அகதி உரிமை மறுக்கப்பட்டதால் – ஈழவன் தொடர்ந்து யேர்மனியில் வாழ்வதற்குரிய வதிவிட உரிமை மறுக்கப்பட்டது.

தினமும் சிந்தனையிலும் மன வேதனையிலும் இருந்தான்.

மனைவி ரோகிணி, "என்னங்கோ இப்படியே நீங்கள் யோசிச்சுக் கொண்டு இருந்தால் என்ன முடிவு? எங்களுடைய காலம் போற இடமெல்லாம் சனியன் தானே முன்னுக்கு நிக்குது. நீங்கள் வந்த உடன் இந்த யேர்மன் மொழியைப் படித்து இருந்தால் அவர்கள் கதைக்கிறது என்றாலும் விளங்கி இருக்கும்."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆனால்– எங்கள் விசாரணைக்கு வந்த மொழி பெயர்ப்பாளனுக்கே ஒழுங்காகத் தமிழ் தெரியாது– அவன் சரியாக நாங்கள் சொல்வதைச் சொல்லி இருந்தால் எங்கடை நிலமை நீதிமன்றத்தில் உள்ளவர்களுக்கு விளங்கி இருக்கும். விசாரணைக்குப் போகமுன்னம்– மொழிபெயர்ப்பாளர், "வேணு– இப்ப இருக்கின்ற சூழ்நிலையில் நீங்கள் என்ன சொன்னாலும் பிரயோசனம் இல்லை" என்றபடியால் தானே– இன்று - எங்களுக்கு வந்தது வினை– இனிமேல் உங்கள் சொந்தக்காரருக்குச் சொல்லுங்கோ! இனிவருகின்ற பிள்ளைகள் என்றாலும் நல்லதமிழ் உணர்வுள்ள மொழி பெயர்ப்பாளர்களைக் கூட்டிக்கொண்டு போகச் சொல்லி–

இனிமேல் ஊரில நாங்கள் போய் என்ன செய்கிறது. பட்டகடனும் தலைக்கு மேல் நிக்குது– பிள்ளைகளின் வாழ்க்கையும் இப்படியே சீர்குலைந்து போகும் என்று நினைக்கவில்லை."

"சரி– சரி– போவது தான் போகின்றோம்– ஊருக்குத்தானே போகின்றோம்! ஊரோட ஒத்த நிலை தானே எங்களுக்கும்– பூனை குட்டி தாவின மாதிரி நாங்களும் இந்த நாடு மாறி – அந்த - நாடு - இப்படி அலைஞ்சும் எங்கடை தலை எழுத்து அலைவது போலதான் இருக்கின்றது."

ரோகிணி– ஈழவனுக்கு ஆறுதல் கூறுவது போல தனது மன வேதனைகயைத் தீர்த்துக் கொட்டினாள்.

ஈழவன் ஆசையாக வாங்கி வைத்த பொருட்கள் கூட ஊருக்குக் கொண்டு செல்ல முடியாதவாறு அவனுக்கு அப்படி தடைகள் ஏற்பட்டது.

விமான நிலையத்தில் ஏறும்போது கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. எல்லாவற்றையும் இழந்து இங்கு வந்தால்– மொழி பெயர்ப்பாளர்கள் செய்த வேலை மட்டும். இன்னும் ஈழவன் மனதில் விட்டு நீங்காத இடத்தைப் பிடித்தது– "எங்கள் ஊராக இருந்திருந்தால் இன்று இவனை நான் என்ன பாடு படுத்தியிருப்பேன்! என்ன செய்வது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசை- ஆசையாக வந்த நான்கு வருடங்களில் சேர்த்து வைத்த பொருட்கள் கூட கொண்டு செல்லமுடியவில்லையே என்ற ஆதங்கம் – அவனுக்கு.

"எங்கள் ஊர் மக்களே எங்களுக்குத் தடைக்கல்லாக இருக்கும் பொழுது நாங்கள் எப்படி முன்னுக்கு வர முடியும்_?"

அவனுக்கு நண்பன் சொன்னதுதான் நினைவில் வந்தது- "எனக்கு நல்ல விசா கிடைத்து விட்டது- நான் ஊருக்குப் போய் வருகிறேன்_ மற்றவர்களைப் பிடித்து அனுப்பினால் எனக்கு என்ன – நான் மட்டும் வாழ்ந்தால் சரி_"

இப்படி எங்கள் சனம் நினைக்கும் போது வேறு நாட்டவன் எப்படி எங்களுக்குக் கருணை காட்ட முடியும்! இதுதான் இன்று தமிழனின் நிலை, என நினைத்தவாறு இலங்கை செல்லும் விமானத்தில் ஏறினான் ஈழவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறும் உருவம்

மாலை நேரம் ஆவதற்குரிய அறிகுறிகள் தெரிந்தன. பறவைகளின் சங்கீதங்கள் காதுக்கு இனிமை கொடுத்தன. கண்ணி வெடியில் இரண்டு கால்களையும் இழந்த மணி, "பிள்ளைகளை எப்படிக் காப்பாற்றப் போகின்றேன்?" என்ற கவலையில் இருந்தார்.

இந்தச் சூழ்நிலையில் குடும்பமே வறுமை நிலைக்கு வந்து விட்டது. மனைவி கனகம், பிள்ளைகளின் கழுத்தில் அழகிற்கு போட்ட சங்கிலி மட்டும் மிஞ்சி இருந்தது. அந்த சங்கிலியை விற்று வயிற்றுப் பசியைப் போக்கினர்.

சாப்பாட்டுக்கே மிக சிரமப்பட்டனர். ஒரு நாள் கஞ்சி இன்னொரு நாள் பட்டினி என வாழ்க்கை தொடர்ந்தது. கனகத்திற்கு நாட்டு நிலை தெரிந்தும் - கடனுக்கு மேலே கடன்பட்டு தன்மகன் தூயவனை வெளிநாடு அனுப்பினாள். துன்பம் நீங்கும் என நினைத்தாள்.

தூரத்து உறவான துரைக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு, தனது நிலைமையைச் சொல்லி அழுதாள் கனகம். தன் மகனை வெளிநாட்டுக்கு எடுத்துவிடுமாறு அழுதாள். துரையும் வாக்கு கொடுத்தான்.

துரையின் இரக்க குணத்தைப் பயன்படுத்தி அவன் வீட்டுக்கே தெரியாது உதவி கேட்டாள் கனகம்.

சில வருடங்களில் கனகத்தின் மகன் ஆப்பிரிக்கா வழியால் புறப்பட்ட இடத்தில் விபத்தில் இறந்து விட்டதாக எண்ணி கனகம் முகவர்களிடம் கட்டிய பணத்தை வாங்கிக் கொண்டு சென்றாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் கனகம் மகன் இறந்ததையும் கொண்டாடினாள். கடன் கொடுத்தவர்களும் கனகத்தின் குடும்ப நிலை எண்ணி பணம் கேட்காது விட்டனர். பல வருடங்களின் பின் ஆப்ரிக்காவில் இருந்து பிரான்ஸ் மண்ணில் காலடி பதித்தான் கனகத்தின் மகன் தூயவன். துரை தனது கடன் தொல்லைகளுக்கு இடையிலும் தூயவனை எடுக்க வாரி இழைத்த பணம் கொஞ்ச நஞ்சமல்ல_ அத்துடன் – தொலைபேசிக்கு கட்டிய பணமும் அதிகம்தான். அப்படி இருந்தும் தூயவனுக்கு உதவி செய்தார் துரை.

துரை வீட்டிற்கு வந்த தூயவன்_ "துரை, நீங்கள் தான் என் தெய்வம்_ நான் கடவுளைக் கண்டதில்லை. நீங்கள் தான் மனித உருவின் தெய்வம்" என உருக்கமாகக் கூறினான் தூயவன். துரை காதில் வாங்காது, தன் கடமைகளில் ஈடுபட்டார்.

சில வருடங்கள் ஓடின. தூயவனுக்கு பாரிசில் அகதி அங்கத்துவ புத்தகம் கிடைத்தது. இரவு பகலாக ஒரு வேலைக்கு மூன்று வேலை செய்து பணத்தைப் பெருக்கிக் கொண்டான்.

துரையிடம் தொடர்பு கொள்வதும் இல்லை. தனது தங்கைக்கும் அவசரத்தில் திருமணமும் செய்து வைத்தான். தான் காதலித்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்ள. ஆனால் துரை கூப்பிட்ட காசை கேட்டதற்கே துரையிடமே கதைப்பதில்லை.

கனகம்_செத்தவீடு கொண்டாடிய தூயவன். துரையின் உதவியால் மிக உயர்ந்த நிலையில் இருக்கின்றான். ஆனால் பிரான்ஸ்சுக்கு அன்றைய தெய்வமாக தெரிந்த துரையார் _இன்று தூயவனுக்கு எட்டிக்கனியாக கசக்கின்றார்.

துரையார் மிகவும் வேதனை அடைந்த நிலையில் தூயவனுக்காக எடுத்த பணத்திற்கு இன்றும் வட்டி கட்டிக்கொண்டு இருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணை

காலையில் சேவல்களின் கூவலுக்கு இடையிலும், காகங்கள் கரைதலுக்கும் இடையிலும் ஆதவன் தன் ஒளிக் கதிர்களைப் பரப்பத் தொடங்கினான்.

ஆனால் அந்தக் கிராமத்தில் அழுகுரல் மட்டும் அங்குள்ள மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தியது. சாமி மட்டும், "பந்தலைப் போடுங்கள், வாழைமரம் கட்டுங்கள், மூன்று விழக்கூடியதாக தோரணம் கட்டுங்கள்" என கண்ணீர் வழிந்தோட கவலைகளுக்கிடையில் வேலையில் மிகமிக ஆர்வமாக ஈடுபட்டிருந்தான்.

ஒரு சில பெண்கள், "இனி எப்படி இந்தச் சின்னப் பிள்ளைகள் தகப்பன் இல்லாமல் வாழப்போகுதுகளோ தெரியாது" என ஒப்புச் சொல்லி அழுது கொண்டே இருந்தனர். அந்த ஐந்து சிறுவருக்குள்ளும்- ஒரு பதினைந்து வயது நிரம்பிய பெண்பிள்ளை மலர்விழி வாழ்க்கையே கேள்விக் குறியாக அழுது கொண்டு நின்றாள்.

அப்பாவின் கடமையில் இந்த மனிதன் ஏன்? தன் வீட்டு வேலைகளைப் போல் தன் சொந்தப் பணத்தை எல்லாம் செலவு செய்கிறார் என்பது புரியாது இருந்தது அவளுக்கு. எல்லா அதிசயங்களுக்குள்ளும் இழவு வீட்டுக்கு வந்த தணிகாசலம், சாமியை அவதானமாகக் கவனித்துக் கொண்டிருந்தார்.

தணிகாசலத்திற்கு சாமியின் மறுவாழ்க்கை அவன் மனதில் திரைப்படம் போல ஓடியது.

"என்ன - இந்த - ஊர் மக்களே இவன் சாமியைக் கவனிப்பதில்லை - எத்தனை தரம் அடிவாங்கி வீதியோரத்தில் நாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதிரிக் கிடந்து இருப்பான். எத்தனை பெண்களை மானபங்கப் படுத்தியிருப்பான்? அப்படிப்பட்டவன், இந்த சுப்புறுவின் மரணச்சடங்கில் அதிக அக்கறை காட்டுவதற்கு என்ன காரணம் என்று புரியாது இருந்தார்.

"சுப்புறு இருந்தால், இந்த வீட்டுப்பக்கம் இவன் காலடி எடுத்து வைக்க விடுவாரா? – சரி –சரி–இழவு வீடுதானே – ஏதோ பிரச்சனை இல்லாமல் துன்பகாரியம் முடிந்தால் சரி" என நினைத்துக் கொண்டார்.

சில நாட்கள் கடந்தன. சொந்தங்கள் எல்லாம் மெல்ல விட்டு விலகினர். யாரும் ஆதரவுக்கரம் நீட்டுவார்களில்லை. அப்பாவும் – அம்மாவும் இல்லாத இந்த குடும்பத்தையும் நாலு ஜீவன்களையும் எப்படி காப்பாற்றுவது என நினைத்து அழுதாள் மலர்விழி.

வர–வர கழுத்தை மெல்ல– மெல்ல துன்பமும் சோதனையும் இறுக்கியது. ஆதரவுக்கரம் நீட்டுவார்கள் இல்லை என்ற நிலையில் மரணத்தைத் தேடி ஐந்து உயிர்களும் பலியாக முடிவெடுத்தன.

ஆனால் "இலவு காத்த கிளிபோல" காத்துக் கொண்டு இருந்த சாமிக்கு நல்ல சந்தர்ப்பம் கிடைத்தது. "என்ன மாலதி, உறவுக்காரர்கள் எல்லாரும் போய்விட்டார் போல இருக்கின்றது. சாப்பாட்டுக்கே பெரிய பாடாமே. நான் உன் தம்பி, தங்கைமார்களை பார்த்துக் கொள்கின்றேன்– நீ என்னைக் கலியாணம் செய்வாயா?" என நல்ல பிள்ளை மாதிரி கேட்டான் சாமி.

மாலதியின் அழகில் எத்தனையோ பேர் ஏங்கிக்கிடந்தனர். ஆனால் சுப்புறு மரணமானதும் மாலதியைத் திருமணம் செய்தால் குடும்பப்பாரம் தலையில் விழுந்துவிடும் என்ற பயத்தில் மலர்விழி மீது ஆசைப்பட்டவர்கள் எல்லோரும் விலகிக்கொண்டனர்.

மலர்விழிக்கு சாமியின் கெட்ட குணம் தெரியும். இருந்தும் குடும்ப பாரத்தை மனதில் கொண்டு பதினைந்து வயது வித்தியாசம் கொண்ட அவனுக்குக் கழுத்தை நீட்ட சம்மதித்தாள். "பூனை இல்லா வீட்டில் எலிக்குக் கொண்டாட்டம்" அது போல் சாமி இன்பக்கடலில் திளைத்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொள்ளி

தொலைக்காட்சியில் வனவிலங்குகளின் படம் ஓடிக் கொண்டிருந்தது. பரந்த வெளியில் சிங்கம் ஒன்று மான் குட்டியைத் துரத்திக் கொண்டு வந்து ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றது. - இன்னொரு பக்கத்தில் காட்டு நாய்கள்_ மீண்டும் அதே மான் குட்டியைத் துரத்திப் பிடித்து அந்த அழகான குட்டிமானின் கதையை முடித்தது_

அருண் "அட சிங்கம் தோற்று விட்ட நிலையில் மான் குட்டி காட்டு நாய்களிடம் தோற்று விட்டதே_" என நினைத்த பொழுதுதான்_

அருணுக்கு வீடு ஞாபகம் வந்தது_

காலையில் எழுந்தால் சேவலின் காலை வணக்கமும்_ பொன் ஒளி தரும் ஆதவனும்_ பசுஞ்சோலையாக நிற்கும் மாமரங்களும், வீட்டு முற்றத்தில் நிற்கும் நந்தியாவட்டைப்பூ மரமும்_ மல்லிகைப்பூவின் வாசனையையும் இனிமேல் நாங்கள் எந்தக் காலம் அனுபவிக்கப் போகிறோமோ தெரியாது.

அப்பா_ கனடாவில்_ அண்ணன் சிவம் லண்டனில்_ தம்பி கமல் _ டென்மார்க்கில்_ தங்கச்சி வரதா. _ பிரான்சில் _ அக்கா குமுதா_ தம்பி இளையவன் _யேர்மன் என்று அமெரிக்கா தொடங்கி ஐரோப்பாவரை உறவுகள் விரிந்து இருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருண் சிந்தனையில், 'எங்கள் குடும்பத்தவர் ஒரு காலம் ஊருக்கு போனால் சர்வதேச மொழி கல்வி நிலையம் ஆரம்பிக்கலாம் போல இருக்கின்றது' என மனதுக்குள் சிரித்தவண்ணம் இருந்தான்.

தொலைபேசி மணி அடித்தது. "அட இந்த நடுசாமத்தில் யார் எடுக்கிறது? மனிசனை நிம்மதியாக இருக்கக்கூட விடுகிறாங்கள் இல்லை" என புலம்பியபடி தொலைபேசியை எடுத்தான் அருண்.

"அருண் என்பது நீங்கள் தானே. நான் வேணு கதைக்கிறேன். மனதைக் கொஞ்சம் திடப்படுத்திக் கொள்ளுங்கோ" என்றதும். "என்ன. நடந்தது?" என பதட்டத்துடன் கேட்டான் அருண்.

"ஒன்றுமில்லை" என இழுத்தான் வேணு. "அது-வந்து உங்கள் அப்பா - திடீர் என மாரடைப்பால் இறந்து விட்டார். அது தான் நீங்கள் உங்க சகோதரங்களுக்கு அறிவித்து விடுங்கோ. மிகுதி நாங்கள் இங்கு பார்க்கிறம்" என்றான், அப்பாவின் நண்பன் வேணு.

பிரான்சில் அகதி விண்ணப்ப கடவுச்சீட்டு வைத்திருந்த படியால் அக்கா குமுதாவுக்கு கனடாவுக்குப் போவதற்கு இலகுவாக இருந்தது.

மிகுதி நாடுகளில் இருக்கும் பிள்ளைகள் கனடா வெளிநாட்டு தூதரகத்தில் சென்று உண்மையான நிலைமையைச் சொல்லி விசா தருமாறு கேட்டனர். ஆனால், கனடா விசா ஏனையவர்களுக்கு மறுக்கப் பட்டுவிட்டது.

"உங்களுக்கு எப்படி தம்பி விசா தரமுடியும். எல்லோரும் அப்பா இறந்து விட்டார் என்று பொய் சொல்லி கனடா போகின்றனர். போனதும் திரும்பி வருவதில்லை. நீங்கள் கேட்பதும் எனக்கு உண்மை என்று தெரிகின்றது. ஆனால் எங்கள் நாட்டுச் சட்டம் இடம் தரவில்லை. தயவு செய்து மன்னிக்கவும்" என அந்த அதிகாரி கூறி அனுப்பிவிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் அக்கா குமுதாவைத் தவிர மற்ற நாடுகளில் இருந்த அண்ணனில் இருந்து தம்பி வரை ஒரே அழுகைதான். அருகில் உள்ள நாடுகளில் இருந்தும் - நல்ல விசா இல்லாத கொடுமையினால் பெற்ற அப்பாவைக் கூட இறுதியில் பார்க்க முடியாத பாவிகளாக மாறிவிட்டோம் என அழுது கண்ணீர் வடித்தனர்.

இறுதிநாள் வரை பெற்ற பிள்ளைகளுக்காகக் காத்து இருந்து விட்டு அருணின் அப்பாவின் உடல் இறுதிக்கிரியையை நண்பன் வேணுவே மகன் தானத்தில் இருந்து நடத்தி முடித்தான்.

அருணுக்கு இந்த உலகத்திலே வெறுப்பே அதிகமாக இருந்தது. உண்மையாக நடந்தும் கூட பெத்த அப்பனுக்கு கடைசியாக கொள்ளி வைக்காத பாவியாகிவிட்டேனே என அழுத வண்ணம் புலம்பிக் கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிவு

காலை ஒன்பது மணிக்கு தேவாலயத்தில் பிரார்த்தனைக்காக எல்லா யேர்மன் மக்களும் ஒன்று கூடினர். அந்த தேவாலயத்தில் இருந்த யேர்மன் காரருக்குள் நான்கு தமிழர்களும் இருந்தனர்.

தேவாலயத்தில் பூசை ஆரம்பமானது. ஆனால் நம்பிக்கு மட்டும் பிரார்த்தனையைக் கேட்க வேண்டும் என்ற மனம் இல்லை - நம்பி மேரியையே கடைக் கண்ணால் பார்த்தபடி இருந்தான்.

மாதங்கள் கடந்தன. நம்பியின் தேவாலய வருகையினால் . மேரிக்கும் நம்பிக்கும் காதல் "இடி முழக்கத்தில் முளைத்த காளான்" போல திடீர் என அரும்பியது.

"மேரி, உன் அழகு என்னைத் தினமும் விழித்தெழச் செய்கின்றது. எனக்கு உன்னைத் திருமணம் செய்ய விருப்பமாக இருக்கின்றது. உங்கள் வீட்டின் விருப்பத்துடன் தான் திருமணம் நடக்க வேண்டும்" என்றான் நம்பி.

யேர்மன் பெண்களுக்குரிய இயல்பான தோள் அசைவை செய்து விட்டு "நம்பி நான் உம்மைச் செய்வது என்றால் நீ - எங்கள் திருச்சபையில் மதம் மாறிய பின்புதான் நான் உன்னைக் கைபிடிக்க முடியும்" என்றாள் மேரி.

நம்பிக்கு வாரிப் போட்டது. 'எங்கள் வீட்டில் அப்பா, அம்மா - தினமும் - முருகா முருகா என்ற வார்த்தையைத் தவிர வேறு வார்த்தை தெரியாதவர். நான் எப்படி மதம் மாறுவது?' சிந்தனையில் ஆழ்ந்தான்.

அன்று இரவு நம்பிக்கு என்ன முடிவு எடுப்பது என்று ஒரே போராட்டமாக இருந்தது. முருகனா இல்லை யேசுவா எப்படி எங்கள் வீட்டில் சம்மதம் வாங்குவது. மேரியின் அழகும் வனப்பும் கண்ணுக்குள் பெரிய போராட்டத்தை நடத்தின.

இறுதியில் முருகன் தோல்வியடைந்து யேசு பிரானுக்கு வழிவிட்டுக் கொடுத்தார். இரண்டு கடவுள்களையும் ஏமாற்றி மதமாற்றத்திற்குப் பின் மேரியைக் கைப்பிடித்தான் நம்பி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருடங்கள் கடந்தோடின. நம்பிக்கு மேரி மேல் இருந்த மோகம் மெல்லென மின் விளக்கு போல ஒளிமங்கத் தொடங்கியது. மேரிக்கும்– நம்பிக்கும் – கருத்து வேற்றுமைப் போராட்டம் நடந்தது.

வருடங்கள் உருண்டு ஓட நம்பி வீட்டில் பெண்பார்க்கும் படலம் தொடங்கியது. நம்பிக்கு நல்ல அழகான பெண்ணின் நிழல் படமும் வந்தது. நம்பி வேலையால் வந்ததும் வாசல்படியில் வெளிநாட்டுக் கடிதம் கண்டு கலங்கிப் போனான்.

"நம்பி – உனக்கு வயது கூடிக் கொண்டே – போகின்றது– எங்களின் குடும்பச் சுமையைப் பார்க்காவிட்டாலும், நீ நேர காலத்திற்குத் திருமணம் செய்து கொள்ள வேண்டும். இந்தப் படத்தைப் பார்த்து உனக்கு பிடித்தால் உடன் பதில் போடவும்'' என வீட்டு மடலில் இருந்தது.

பெண்ணின் நிழல் படத்தை ஆவலுடன் பார்த்தான். மேரியை விட இந்த பூந்தோப்பு செல்வி மிக அழகாக இருந்தாள். நம்பி உடனே பதில் எழுதிப்போட்டான் சம்மதம் என்று.

சில வருடங்களில் செல்வி யேர்மனியில் காலடி எடுத்து வைத்தாள். மறுநாள் நம்பியின் நண்பன்– "நான் சொல்வதை மட்டும் கேட்கவும் நம்பியை நம்பி மோசம் போக வேண்டாம். முதலில் – மதம் மாறி மேரியைத் திருமணம் செய்தான். அப்படிப்பட்டவன் உங்களையும் ஏமாற்ற மாட்டான் என்று நீங்கள் எப்படி நினைப்பீர்கள்? ''

மாலையில் வீடு திரும்பினான் நம்பி.

எல்லாவற்றையும் மறைத்து திருமணம் செய்த நம்பிக்கு செல்வியின் பதில் செருப்படியாக இருந்தது. "எந்த நாட்டுப் பெண்ணாக இருந்தாலும் பெண்– பெண்– தானே– நேற்று மேரிக்காக யேசு இன்னும் யாருக்காக என்ன எல்லாம் செய்வாய் – உத்தம புத்திரன் என்று நம்பி இருந்தேன். என் வாழ்க்கையைப் பாழாக்கி விட்டாயே துரோகி அதற்குள்ளும் கொழுத்த சீதனம் கேட்கின்றதோ நம்பிக்கு– '' என பேசி விட்டு—

தனது பெட்டியை எடுத்துக்கொண்டு அயல் நாட்டுக்குச் சென்றாள்.

நம்பி – ஆதரவற்ற தனிமரமாக பேச்சு மூச்சின்றி நின்று கொண்டிருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முற்றும்

## நன்றிப்பெருக்குடன்

என் தாய் தந்தைக்கும், என்னை நல்வழிப்படுத்திய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும், சகோதரர்களுக்கும், என் மனைவி, பிள்ளைகளுக்கும் நன்றி.

## நண்பர்களுக்கு

என் குறுகிய கால தமிழ் ஆக்கத்திற்கு, ஆக்கமும் ஊக்கமும் அளித்து. இந்நூலை வெளியிடவேண்டும் என ஊக்கப்படுத்திய கமலம் சஞ்சிகை ஆசிரியர் (அழலாடி) நாசி. கமலநாதன். வீரகேசரி எஸ். என் . சேதுபதி அவர்கட்கும், உதபஇ. பொதுச்செயலாளர். கேரி. கணேசலிங்கம்; சங்கமம் ஆசிரியர். விசு; மலரும்மாலைகள் வீடியோப்பத்திரிக்கை என்.வி. சிவநேசன்; மண் சஞ்சிகை ஆசிரியர் வ. சிவராசா; தமிழருவி ஆசிரியர். நயினை விஜயன்; கவிவேந்தன் வேலாயுதம் (பேர்லின்); மதிப்புக்குரிய மேகம் சஞ்சிகை பிரதம ஆசிரியர். டாக்டர். க. இந்திரகுமார் (லண்டன்); பேரன்புமிக்க. யே. எஸ். ஞானமுத்து. (நெதர்லாந்து); நண்பர். கவிஞர் பாரதிபாலன் (டென்மார்க்) நண்பர்கள் அனைவர்க்கும் எனது மனமார்ந்த நன்றி.

தமிழன்புடன்
ஈழம் ஆசிரியர்
***சின்னத்துரை இராசகருணா***
(ஈழ முருகதாசன்)
யேர்மனி 5.11.1999

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிமேகலைப் பிரசுரம்
சென்னை - 600017

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org